## யாழ்ப்பாணம்

# கட்டைப்பிராயின் வாழ்வியல்



உயர்திரு.சின்னத்துரை இலட்சுமிகாந்தன்

## 70வது அகவை நூல் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம்
# கட்டைப்பிராயின் வாழ்வியல்

## உயர்திரு சின்னத்துரை இலட்சுமிகாந்தன்

## 70வது அகவை நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

உயர்திரு சின்னத்துரை இலட்சுமிகாந்தன் அவர்கள் அகவை எழுபதில் காலடி பதிக்கும் இவ்வேளையில் அவரை உளமார வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன். செயற்கரிய சேவை செய்யும் விழாநாயகன் எல்லோருக்கும் விருந்தளிக்க எண்ணிய போது வாயார உண்டு மனமார வாழ்த்துவதுடன் அதனை ஒரு பதிவாக்குமாறு வேண்டினேன் எமது சமுதாயமும் மூதாதையரும் விட்ட, விடுகின்ற தவறு நிகழ்வுகளை வரலாறுகளை பிற்கால சந்ததியறியும் வண்ணம் ஆவணப்படுத்தாமையேயாகும்.

இது எமது தமிழ்ச் சமூகத்திற்கும் பொருந்தும் இதனால் உண்மைகள் பல உறங்குவதும் பொய்மைகள் வரலாறாக ஏற்கப்படுவதும் நடைபெற்றுக் கொண்டே யிருக்கிறது பத்துடன் பதினொன்றாக இவரது நிகழ்வும் போகாதிருக்க அதேவேளை நிகழ்வை முன்னிட்டு தான் வாழும் பிரதேச வரலாற்றை ஓர் ஆவணமாக்கக் கோரினேன் கோரிக்கை வீண் போகவில்லை. அறிஞர்கள் பலரது ஆக்கபூர்வமான ஆக்கங்களைப் பெற்று இச்சிறு நூலாக்கினேன் இது இப்பிரதேச மக்களின் முதல் வரலாற்று ஆவணமாக அமையும் என்பதில் வியப்பில்லை. ஒவ்வொருவரும் பேணுவது மட்டுமன்றி இது ஒரு தொடக்கப் புள்ளி மட்டுமே இதிலிருந்து மேலும் பிரதேசம் தொடர்பான ஆய்வுகள் வெளிவரவேண்டும் இதற்கு அகவை எழுபதில் இவர் விழா முதலடியாக அமைகின்றது எல்லோரும் இம் மலரை நுகர்மின், அவர் பணியை முன்னுதாரணமாக்கி நாம் எம் பணியை தொடர்வோமாக. இம் மலருக்கு குறுகியகால அவகாசத்துடன் கட்டுரைகளை வழங்கிய கட்டுரை ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் என் சார்பிலும் விழா நாயகன் குடும்பம் சார்பிலும் மனமார்ந்த நன்றிகள் பல.

**மலராசிரியர்**
**எஸ்.பத்மராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- அகவை 70இல் விழா நாயகன் ஓர் பார்வை 01
- கட்டப்பிராய் ஊரும் வாழ்வியலும் எங்களூர் விவசாயமும் 03
- கட்டப்பிராய் மாண்மியம் 10
- யாழ் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய வளங்களும் முதலீட்டுக்கான வாய்ப்புக்களும் 13
- அம்பிகையின் அருட்பார்வைக்கு உட்பட்ட கட்டப்பிராய் பிரதேசம் 19
- தமிழர் பண்பாட்டில் வாழ்க்கை வட்டச் சடங்குகள் 22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா நாயகன் துணைவியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 70இல் விழா நாயகன் ஓர் பார்வை

திருநெல்வேலிக் கிராமமானது விவசாயம், கல்வி, கலாசாரம், ஆன்மீகம், அறப்பணி என பல் பரிமாணங்களும் ஒருங்கே அமைந்த பதியாகும். இப்பிர தேசத்திலே இல்லறமதை நல்லறமாக்கிய செல்லமுத்து சின்னத்துரை கொக்குவில் கிழக்கு நந்தாவில் பகுதியைச் சேர்ந்த அப்பாக்குட்டி கனகம்மாவை கரம்பிடித்தத னால் சின்னத்துரை கனகம்மா தம்பதியினரு க்கு வாய்த்த வாரிசாக விழாநாயகன் இலட்சுமிகாந்தன் அவதரித்தார். அழகும் அன்பும் மிக்க இவருக்கு பெயருக்கேற் குணங்கள் அமையப்பெற்றமை பெரும் பேறே. இலட்சணமும் இலட்சியமும் பிறரை வசீகரிக்கும் இயல்பும் சேவை மனப்பாங்கும் இவரை ஏனையவரிடமிருந்து தனித்துவம் மிக்கவராக அடையாளப்படுத்தின. நல்ல தொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பது போல இல்லற வாழ்வை நாடிய போது கட்டைப்பிராய் கிராமத்திலே இலங்கை போக்குவரத்துச்சபை நேரக்கணிப்பாளரா கிய ஐயாத்துரை இராசம்மா தம்பதியின் ஏகபுதல்வி தங்கமணி எனும் நல்லாளை வாழ்க்கைத் துணைஆக்கி மகிழ்ந்த இவர் வம்சம் தளைத்திட முத்தான முத்துக்களாக மூவர் வாய்க்கப் பெற்றனர். "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற குறளுக்கமைய பிள்ளை களும் உயர்கல்விதனில் சிறந்து விளங்கி யமை பெரும் பேறே. தந்தை மகற்காற்றும் உதவி இவன் தந்தை என்னுற்றான் சொல் என்பது வள்ளுவர் வாக்கு. இவ்வாக்கு மெய்த்திட இவரும் வாழ்ந்ததனால் இவர் மக்களும் அதனை செயலுருவாக்கினர். இத் தகைய குடும்பச் சூழல் இவரை சேவையின் பால் ஈடுபட வைத்தது கட்டைப்பிராய் கிராம அபிவிருத்திச் சங்க தலைவராய் கட்டைப் பிராய் முத்துமாரியம்மன் தேவஸ்தான பரிபாலனசபைத் தலைவராய் சர்வதேச லயன்ஸ் கழக சங்க உறுப்பினரர், செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சங்கத் தலைவ னாய் செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினராய் நல்லூர் ஓய்வூதியர் சங்க நிர்வாக உறுப்பினராய், முதியோர் சங்கத் தலைவராய் என பல்வேறு பணிகளி லும் ஈடுபட்டு சேவை புரிய வைத்தது மக்கள் சேவையே மகேசன் சேவை என பணியாற்றி வரும் இவர் இன்றும் ஓர் துடிப்புள்ள இளை ஞனாக செயல்வீரனாக தான் சார்ந்த நிறுவனப் பணிகளை முன்னெடுத்துச் செல்வது பாராட்டிற்குரியதே. அகவை எழுபதை அடையினும் ஆண்டவன் ஆசி அவரது உடலும் மனமும் இளமையாகவே இருப்ப தாகும். நாவுக்கரசரும் "வாயே நீ வாழ்த்துக் கண்டாய்" என மொழிந்திருப்பது நல்லவர் களை வாழ்த்துவதற்கே ஒருவர் வாழும் போதே அவரை கௌரவிக்க வேண்டும் இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கு ஓர் முன்னுதாரனமாகும். ஒரு வரது சேவையை, பணியை, நற் செயலை, உயர்வை பாராட்ட வேண்டும் இதனால் அவரது சேவை உயரும் நாமும் மகிழ்வடைவதால் எமது மனமும் நெகிழ்வடையும்.

இன்றைய விழா நாயகன் ஆரம்பக் கல்வியை திநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திலே கற்று இடைநிலை, உயர்தர கல்வியைச் செங்குந்த இந்துக் கல்லூரியிலே பெற்றவர். பின்னர் தொழிற் கல்வியை கிளிநொச்சி விவசாயக் கல்லூரி யில் பெற்றதுடன் கொக்குவில் தொழில்நுட் பக் கல்லூரியிலும் கல்வி கற்றவர் அன் நிறுவன மாணவர் தலைவனாகவும் விளங்கி யதுடன் இணைப் பாடவிதானங்களிலும் சிறப்புற்று விளங்கினார். இது இவரது ஆளுமை விருத்திக்கு உதவியது மட்டுமன்றி சமூக சேவையின் பால் ஈடுபாடு கொள்ள வும் உதவியது எனலாம். தனது 19ஆவது வய தில் கேணியடி சனசமூக நிலையம் மூலம் சமூக சேவைக்குள் தடம்பதித்த இவர் திரு நெல்வேலி இந்து வாலிபர் சங்கத்திலும் இணைந்து விளையாட்டுத் துறையிலும் தனக்கென ஓர் தனியிடத்தை நிலைநாட்டி னார்.

இவர் தொழில் உலகிலும் ஒரு சாதனையாளராக விளங்கினார். 1974ஆம் ஆண்டில் திருநெல்வேலி விவசாயப் பண் ணையிலே தற்காலிக சிற்றூழியராக இணை ந்து 1976இல் நிரந்தர நியமனம் பெற்று வவுனியா ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே விவசாய விஸ்தரிப்பு சேவையாளராக அரச பணியினை ஆரம்பித்தார். பின்னர் 1989இல் கிராம அலுவலராக பதவி மாற்றம் பெற்று அரியாலை, நல்லூர் பிரதேசங்களிலே ஓய்வு பெறும் வரை கடமைபுரிந்தவர் அறுபதில் (2004)இல் ஓய்வு பெறினும் இவரது சேவைத்திறனால் ஐந்து ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையிலும் பணி புரிந்தார்.

தானுண்டு தன் குடும்பமுண்டு தன் பணியுண்டு என சுயநலமாக வாழும் பலரு க்கு இவரது வாழ்வும் பணியும் ஓர் முன்னு தாரணமாகும். சேவை செய்வதே ஆனந்தம் என்பதற்கமைய மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழும் மானிடனுக்கு விழா எடுப்பதால் சமூகமும் பொது அமைப்புக்க ளும் பெருமை கொள்கின்றது.

"தோன்றிற் புகழுடன் தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

–விழாக்குழு–


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப கல்லூரி மாணவ தலைவனாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டப்பிராய் ஊரும் வாழ்வியலும் எங்களூர் விவசாயமும்

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல் பேராசிரியர்,
பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புக்கள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கைத்திருநாட்டின் தலைப்பகுதியாக வடமாகாணம் அமைந்திருப்பது தனித்துவமான சிறப்புக்குரியது. வடமாகாணத்தின் தலையாக யாழ்ப்பாணக் குடாநாடு செம்மணியுடனான பிரதேசத்தினை தென்கிழக்கு வரையறையாக கொண்ட வளமான ஊர் கட்டைப்பிராய் ஆகும். அந்நாட்களில் பிராய் எனப்படும் உயரத்தில் குறைவான மரம் அதிகமாக இருந்ததனால் மரத்தின் பெயரையடிப்படையாக கொண்டு அதன் உயரத்தையும் வழக்காக்கி கட்டையான பிராய் என அழைத்தார்கள் என அறியமுடிகின்றது. காலப்போக்கில் பெயர்மருவி கட்டைப் பிராய் என ஆனதாக அவ்வூர் பெரியவர் விளக்கமளித்தார். ஒவ்வொரு ஊரின் வரலாறும் ஆவணமாக்கப்பட வேண்டும். கரவெட்டியில் பிறந்த எனக்கு கரவெட்டியைப்பற்றி கரவை வேலன் கோவை என்னும் ஆவணம் இருப்பதையறிந்து மகிழ்வடைந்தபோது அதே மகிழ்ச்சி கட்டைப்பிராயைப்பற்றியும் இருக்க வேண்டுமென திரு லட்சுமிகாந்தன் அவர்கள் கூறியபோது இருந்தது. அது இவ்வாவணப் பதிப்பின் மூலம் ஓரளவிற்காவது நிறைவேறும் என எதிர்பார்க்கலாம்.

நாம் இப்பூமியில் வாழ அருளித்த எம்பெருமானும், வழிகாட்டி நெறிப்படுத்திய முதியவரும், முந்தையரும், வாழுகின்ற ஊரும் வளங்கொண்ட நன்நாடும் எமக்கு கிடைத்த பொக்கிஷங்கள். வரலாறு என்றுமே தன்பணியைச் சரிவர செய்திருக்கின்றது. மக்கள் வாழ்ந்த வரலாறு அவர்கள் மறைந்தபின்னும் தடயங்களாக தளைத்து நிற்கின்றமையை பல கிராமங்களில் இன்றும் காணலாம். தேசம் அழிந்தாலும் அதில் வாழும் மக்கள் தொலைந்தாலும் வரலாறு என்றுமே அழிவதில்லை. எமது தேசத்தில் பல சுப நிகழ்வுகள் இனிதே நடந்தேறும்போதும் அதற்குள்ளும் சோக நிகழ்வுகளே ஆங்காங்கே தொக்கி நிற்கின்றன.

இழப்புக்கள் வழமையாகி அந்நியப்பட்ட பூமியாக அவலப்பட்ட காலங்களுக்கூடாக பயணித்த அனுவத்தினால் வடபகுதியில் மக்கள் உள்ளூர இடம்பெயர்ந்ததும் இங்கிருந்து தென்பகுதிக்கும் தமிழ்நாட்டிற்கும் மேலும் வெளிநாடுகளுக்கும் நகர்ந்து விட்டனர். கட்டைப்பிராயும் இதற்கு விதிவிலக்கல்ல. பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பிரதேசத்தை விட்டு புதிய இடங்களுக்கு நகர வேண்டிய நிலைமை காலத்தின் கட்டாயமாகவும், எதிர்காலத்தின் நம்பிக்கையாகவும் ஆனதால் இங்குள்ள மக்கள் பலர் தற்போது தங்கள் கட்டைப்பிராய் வாழ்விடத்தில் இல்லை. தொலைந்தவை பல தொலைக்கப்பட்டவையும் பல, இருப்பினும் இவ்விடர்களையும் தாண்டி, சுகித்து, தப்பி வாழ்பவர்கள் சிலர். அதிலும் இருப்பிடத்தை விட்டு இடம்பெயர்ந்து இன்னும் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் பலர், இருப்பினும் கட்டைப்பிராய் என்னும் தங்கள் பிறந்த பூமியை அங்கிருக்கும் பூர்வீகக்குடிகளையும் புலம் பெயர்ந் தாலும் அவ்வப்போது வந்து தரிசிப்பதுண்டு. மூதாதையர் வாழ்ந்த தேசமல்லவா. மூத்த குடிகளின் மகிமையில் இந்தப் பூமிக்கும் கிடைத்த சிறப்பு தொடர்ந்த வண்ணமே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைப்பிராய் என்னும் கிராமம் விவசாய பூமியாகி விவசாயஞ் செய்தவர்களை அதிகங்கொண்டு அமைதியாக வாழ்ந்த வாழுகின்ற பிரதேசம். இக்கிராமத்தின் அடையாளமே கட்டைப்பிராய் முத்துமாரியம்மன் ஆலயந்தான். மண்ணுக்கும் மரத்திற்கும் இன்னும் தேசத்திற்கும் அன்னையையே அடையாளமாக்கியதால் கட்டைப்பிராயில் முத்துமாரி ஆலயங்கொண்டு ஆட்சிபுரிகின்றாள் எனலாம். இதனுடன் சேர்ந்து வயல்வெளி கந்தசாமி கோவில், வெள்ளா தோப்பு அம்மன் கோவில், ஞானவைரவர் கோவில், அம்மன் கோவில், நாகதம்பிரான் கோவில் என்பன அருளாட்சி தந்து அமைந்திருக்கின்றன. வயற்கரையுடனான ஊர் என்பதனால் கோவில்களின் அமைவிடமும் அவற்றின் சிறப்பும் விவசாய செய்கையுடன் இரண்டறக் கலந்திருப்பதை எங்கும் அவதானிக்கலாம். எமது பயிர்ச்செய்கை வானம் பார்த்து பூமியுழுது நடைபெற்றது அந்தக்காலம். இப்போது வானத்தை விஞ்ஞானம் பார்க்க நாம் விஞ்ஞானம் என்ன சொல்கின்றது என பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இயற்கையின் சீற்றம் விஞ்ஞானத்தால் எதிர்வு கூறப்பட்டாலும் விஞ்ஞானத்தில் கொடிகட்டிப்பறக்கும் ஜப்பானையே வருடம் வருடம் இயற்கை சீறிச்சினந்து அழிவுகளை ஏற்படுத்திவிடுகின்றது. ஆனால் பாரம்பரியமாக விவசாயம் செய்துவந்த எம்மவர் வானத்தில் நட்சத்திரங்களைப் பார்த்து காலத்தை கணித்து விதையெறிந்ததும் நாற்று நட்டதும், களை பிடுங்கினதும் அறுவடை செய்ததும் எமது விவசாய பண்பாடு அதுதான் எம்மவர்களின் வரலாறு. அதனை நாம் தற்போது மறந்து விட்டோம். வாழ்ந்து வரலாறான பெரியவர்களை ஞாபகப்படுத்தி அவர்களின் புகழ்பாடி இனி வரும் எம்எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதற்கு இது போன்றதொரு ஆவணமாக்கல் அவசியமானது. காலத்திற்கேற்ற கைங்கரியங்கூட.

ஆலயத்தை மையமாக வைத்து வடபுலமெங்கும் மக்கள் குடியிருப்புகள் அமைந்திருப்பதனை காணலாம். ஆலயந்தொழுவது சாலவும் நன்று என விழித்தமைக்கு காரணமுண்டு. இறையாசியுடன் எந்த காரியத்தையும் ஆரம்பித்தல் வேண்டும் என்பதற்கும் இதுவே சான்று. இதற்கும் மேலாக ஆலயத்தின் கோபுரம் புனருத்தாரணம் செய்யப்படுகின்றது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பதற்கு இது இன்னொரு சான்று. முத்துமாரியம்மன் ஆலயத்தைப் போன்று இன்னும் பல கோவில்கள் இக்கிராமத்தில் அமைந்திருப்பது சிறப்புக்குரியது. ஏனைய பகுதிகள் போன்று கட்டைப்பிராயிலும் இரு ஆண்களுக்கு ஒரு பெண் எனும் பால்நிலை சதவீதம் அமைந்திருக்கின்றதை காணமுடிகின்றது. ஏறக்குறைய 700 குடும்பங்கள் இருக்கின்றன. நெல் எனும் தானியத்தின் விளைச்சல் தான் இங்குள்ள மக்களின் உழைப்புக்கு சான்று. ஆனால் பல்துறை தொழில்வாய்ப்புக்களுக்குள் இப்போது இவ்வூரினது இளையவர்கள் உள்வாங்கப்பட்டதனால் தொழிலை நோக்கிய நகர்வும் இங்கு உணரப்பட்டுள்ளது. அக்கரைக்கு இக்கரை பச்சை என்பதனை இங்கிருந்து வெளிநாடு சென்று கற்றுவிட்டு இங்கு தொழில்புரிய வரும் ஒருவருக்கு நன்றாகவே விளங்கும்.

கட்டைப்பிராய் என்னும் ஊருக்குள்ளே கட்டைப்பிராய் பகுதி 1, மற்றும் பகுதி 2, நல்லூர் வடக்கு, ஆனந்தபுரம், நாயன்மார்க்கட்டு, ஞானவைரவர் கோவிலடி என்னும் கிராமங்கள் அடங்குகின்றன. குறிப்பிட்டுக் கூறக்கூடிய வளங்களென்று கட்டைப்பிராய் கொண்டிருக்கா விட்டாலும் இம்மண்ணைத்தேடி பலர் வருவதுண்டு. அதற்கு காரணம் இவ்வூரிலே குடிகொண்டிருக்கும் இறைசக்தி முத்துமாரி அம்மாள்தான் என்றால் மிகையாகாது. தெய்வநம்பிக்கை அதிகம் கொண்ட மக்கள் வாழ்ந்து ஊர் என்பதனை அறியும் போது அவர்களை போற்றுதற்கு தகும். இந்த ஊரிலிருந்த மக்கள் சிறிது சிறிதாக வேறிடம் நாடி செல்வதனை அனுமதிக்க முடியாது. ஆதலால் மக்களை கட்டைப்பிராயை நோக்கி திசைதிருப்பும் பணியை உள்வாங்கினால் அதற்கு விடை தாராளமாக உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து தொழில்நுட்பங்களையும் ஊர்களை நோக்கி திருப்பி நாம் அங்குள்ள மக்களை அங்கிருந்தே பணிபுரிய செய்தல் வேண்டும்.

வழக்கமான பலத்த எதிர்பார்ப்புக்களுடன் புதிய வருடம் 2015 பிறக்கவிருக்கின்றது. அவனியில் அவதரித்த ஒவ்வொருவருக்கும் கட்டைப்பிராய் முத்துமாரியம்மனின் ஆசீர்வாதத்துடன் இப் புது வருடம் புத்துணர்வினையும் புதுவாழ்க்கையையும் தன்னம்பிக்கையையும் மனங்களுக்கிடையேயும் இனங்களுக்கிடையேயும் நல்ல புரிந்துணர்வையும் கொடுக்க வாழ்த்துக்கள்! எம்மினிய உறவுகளுக்கு நில புலன்கள் மீண்டும் கிடைத்து, செழித்து விவசாயத்தில் சிறப்புற்று வெள்ளாண்மை வீடுவந்து சேர்ந்து அனைவரும் வளமாய் வாழ பசுமையின் சுமைதாங்கி பசுமையின் (பசு+மை=பால்) நிறத்தை கலவையாக்கி இனியொரு பசுமைப் புரட்சிக்குள் இழுத்துவர முயற்சிக்கும் இக்கைகளின் மனம் நெகிழ்ந்த வாழ்த்துக்கள்! கட்டைப்பிராயில் வதியும் மாணவச் செல்வங்களுக்கு கல்வியில் பயன்கள் பலபெற்று சித்தியும் பெற்று தாமாகவே தமது வாழ்க்கையை வடிவமைக்க வழிபிறக்கும் என எண்ணுவோம்.

இவ்வருடத்திற்கான வரவேற்பு இம்முறை பலமானதாக இருக்கப் போகின்றது. இறை செயலால் மழைபெய்து விவசாயத்திற்கு நீர்பாய்ச்ச, குடிப்பதற்கு, குளிப்பதற்கு, சமைப்பதற்கென தேவையான நீர் கிடைத்திருக்கின்றது. கடந்த இருவருடங்கள் மழையின்றி பூமி வரண்டு, பயிரும் சுருண்டு, கால்நடைகள் துவண்டு துன்பப்பட்ட நிகழ்வுகளை இம்முறை மழை மாற்றியமைத்திருக்கின்றது. அனைத்தும் இறைவனின் சக்தியிலேயே இயங்குகின்றன. சக்தியின் ஆதிமூலம் ஆதவன் தானே. விவசாயத்திற்கும் இந்த சக்தி மிக முக்கியமானது. ஆதவனின்றி எதுவும் நடக்காதே. வடபகுதிக்கு கொடுத்து வைத்த சக்தியில் சூரிய சக்தி முதன்மையானது. ஆனால் அதனை நாம் சிறப்பாக பயன்படுத்தவில்லை. சூரிய சக்தியை நாம் பயன்படுத்த முயன்றால் எமது சக்திதேவை கணிசமான அளவுக்கு குறைந்துவிடும். மலிவானதாகவும் இருக்கும். அனைவரும் பயன்படுத்தலாம்.

கடவுளை மனதில் எண்ணி தைரியத்தை வரவழைத்து நாம் வாழுகின்றோம். நாம் அழித்தவை போக மீதியானவற்றை இயற்கை தன்பாட்டுக்கு சீறிச்சினந்து துவம்சமும் செய்தும் விடுகின்றது. இனி இயற்கையுடன் சமாதானம் பேசவேண்டிய காலமாகும். கடல் அலை சுனாமியாக வந்து அனைவருக்கும் இதனைத்தானே சொல்லிச் சென்றது. சாதி, சமய, இன, பால் பேதமின்றி அனைவரையும் தானே காவு கொண்டது. இந்த மனதை உறுத்தும் அனுபவமிருந்தும் நாம் இன்னும் நம்மை மாற்றிக் கொள்ளவில்லையே. விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்கள் இயற்கை அனர்த்தங்கள் நடைபெறுவதை முன்கூட்டியே அநுமானிக்க முடிந்தாலும் விஞ்ஞான கண்டுபிடிப்பின் உச்சியிலிருக்கும் ஜப்பான் நாட்டையே உலுக்கியிருக்கின்றது என்றால் ஏனைய நாடுகள் எம்மாத்திரம்.

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் தற்போது எமது நாட்டையும் சீண்டிப்பார்த்துக் கொண்டிருக்கின்றது. இது காலங்கடந்ததாக இல்லாதிருக்க நாம் விரைந்து முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். வடபகுதிக்கான அனைத்து வசதிகளையுங் கொண்ட வானிலை அவதானிப்பு நிலையம் அவசியம் வேண்டும். இதில் வானிலை பற்றிய ஆய்வுகள் பலமாக வளமாக செய்தல் வேண்டும். கல்விசார்ந்து ஆய்வுகளை முடுக்கிவிட வேண்டும். வடபகுதி வானிலை மாற்றங்களை துல்லியமாக அளவீடு செய்து விவசாய பெருமக்கள், மீன்பிடி தொழிலாளர்கள், கால்நடை வளர்ப்போர், விவசாயஞ்சார் தொழில்முனைவோர் அனைவருக்கும் கிரமமாக தெரியப்படுத்த வேண்டும். காலநிலை மாற்றத்தினை முன்கூட்டியே அநுமானஞ்செய்து மக்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்துவதனால் பலவிதமான இடர்களைத் தவிர்க்க முடியும். வடபகுதி புலமையாளர்களினதும் இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுவதிகளினதும் ஓத்துழைப்பை இதில் பயன் படுத்தலாம். விவசாய மற்றும் விஞ்ஞான பட்ட தாரிகளை இதில் பணியிலமர்த்தி வினைத் திறன் மிக்க அனைவருக்கும் அவசியம் தேவை யான காலநிலைமாற்றம் பற்றிய தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். இது ஆலோ சனையல்ல அவசியம் நடைமுறைப்படுத்த வேண்டிய செயன்முறை.

ஐக்கிய நாடுகள் தாபனம் அறிவிப்ப தற்கு முன்பாகவே எமது பிரதேசத்தில் குடும்ப வேளாண்மை சிறப்புற்றிருந்ததை நாம் எல்லோரும் அறிவோம். இது எமக்கான தேவை யாக பரம்பரை பரம்பரையாகவே உணரப்பட்ட தொன்று. எமக்கான உணவுத் தேவையை நாம் ஆரம்பகாலத்தில் பூர்த்தி செய்ததையும் பின்னர் மக்கள் தொகை அதிகரித்த போது எம்மால் அதனை ஈடுகட்ட முடியாது நாம் திக்குமுக்காடிய போது பசுமைப்புரட்சியே கைகொடுத்தது. ஆனால் பசுமைப் புரட்சி எமக்கு உணவு உற்பத்தி செய்ய வழிசமைத்து கொடுத்தாலும் பின்னர் அதனை சூழலை மாசுபடுத்தியதற்காக குறை பட்டுக்கொண்டதையும் எமக்கான பாடமாக நல்ல அனுபவமாக கொண்டு இனிவருங்கால உணவுற்பத்தியை செம்மைப்படுத்த வேண்டும். பரந்துபட்ட உணவுற்பத்தி தேவையை சிறிய விவசாயிகளை மையப்படுத்தியே உலக உணவு ஸ்தாபனம் பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக மேற்கொள்ள முனைந்திருப்பதை றியோ+20 ஆய்வு மாநாடு முன்னிலைப்படுத்தியிருப்பதை யும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். குடும்ப வேளாண்மையின் முக்கியத்துவம் அதிலிரு ந்தே ஆரம்பித்திருக்கின்றது எனலாம். குடும்ப வேளாண்மையின் தாற்பரியம் எமது மக்களுக் கான நஞ்சற்ற உணவினை உற்பத்தி செய்யும் அதே வேளையில் அவர்களுக்கான உணவினூ டாக மக்களுக்கு தேவையான ஊட்டச்சத்தினை யும் சேர்த்துக்கொடுக்க முனைந்திருக்கின்றது. மொத்தமாக அசேதன இரசாயனத்தை உள் வாங்கிய பயிர்ச்செய்கை முறைக்கூடாக நாம் உணவினை உற்பத்தி செய்ததை தவிர்த்து இயன்றளவில் குறைத்து நிறைவாக சேதன முறை மூலமாக உணவினை உற்பத்தி செய்ய குடும்ப வேளாண்மை முயற்சிக்கும் எனலாம்.

குடும்ப வேளாண்மையில் உணவினை உற்பத்தி செய்யும் போது அது வீட்டுத் தோட்டத் தில் நாம் பெறுகின்ற பயன்களனைத்தையும் உள்வாங்கியதாக இருக்கும் என்ற நம்பிக்கை தற்போது அனைவருக்கும் உண்டு. நாம் இன்னும் வீட்டுத்தோட்டத்தின் பயன்பாடுகளை முழுமை யாக உணரவில்லை. வீட்டுத்தோட்டம் என்பது நாம் எண்ணுவது போல வெறுமனே உணவுற் பத்தி செய்வது மட்டுமல்ல. அல்லது அழகுக்காக வீட்டிலே வர்ண இலைத்தாவரங் களை வைத்திருப்பதும் அல்ல. மாறாக வீட்டுக் குக்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்வது டன் பழங்கள், கிழங்குகள், என பலவகைகளை உள்ளடக்கியதாக இன்னும் விற்றமின்கள், நார்ச் சத்து, இலைச்சத்து என்பனவற்றையும் கொண்டி ருக்க வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்படு கின்ற தாவரங்கள் மகரந்த சேர்க்கையாளர் களை கவர்வதற்காக பூக்கும் தாவரங்களை கொண்டிருக்க வேண்டும். அழகுக்காக பூக்கும் தாவரங்களை வளர்ப்பது வீட்டுத்தோட்டத்தில் முக்கியமானதாகும். பூக்கும் தாவரங்களை தெரிந்தெடுத்து வீட்டுத்தோட்டத்தில் வளர்ப்பது எமக்கான கலையாகும். சாதாரணமாக எமது பிரதேசத்தில் வளரும் பூக்கும் தாவரங்களை நாம் பயன்படுத்தி அதனை அழகுக்காக வளர்க்க ஆரம்பிக்கும் போது அது மகரந்த சேர்க்கை யாளர்களை குறிப்பாக தேனீக்கள், குளவிகள், வண்ணத்துப்பூச்சிகள், வண்டுகள் இன்னும் சிறிய பறவைகள் ஆகியனவற்றை விரும்பி கவரும். இதன் மூலமாக எமது வீட்டுத்தோட்டத் தில் நன்மை தரும் உயிரினங்களின் நடமாட்ட த்தை நாம் அதிகரித்துக்கொள்ளலாம். உயிருள்ள வீட்டுத்தோட்டமாக நாம் உருவாக்கு வதே எமது குடும்ப வேளாண்மையின் எதிர் பார்ப்பினை பூர்த்தி செய்வதாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலியல் விவசாயத்தின் தேவை எமது விவசாய செய்கையில் ஏற்கெனவே உணரப் பட்டிருப்பதம் குடும்ப வேளாண்மையில் இதனது பயன்பாடு அதிகமாக உள்வாங்கப்பட வேண்டி யிருக்கின்றது. எமக்கிருக்கும் உள்ளூர் வளங் களை நாம் முறைப்படி இருக்கின்ற தொழில் நுட பத்தை உள்வாங்கி செயற்படுத்தும் போது குடும்ப வேளாண்மையின் தேவை பூர்த்தி செய்யப்படும்.

எமது பிரதேசத்தில் குடும்ப வேளா ண்மை சிறப்புற்றிருந்ததை நாம் எல்லோரும் அறிவோம். இது எமக்கான தேவையாக பரம் பரை பரம்பரையாகவே உணரப்பட்டதொன்று. எமக்கான உணவுத்தேவையை நாம் ஆரம்ப காலத்தில் பூர்த்தி செய்ததையும் பின்னர் மக்கள் தொகை அதிகரித்த போது எம்மால் அதனை ஈடுகட்ட முடியாது நாம் திக்குமுக்காடிய போது பசுமைப்புரட்சியே கைகொடுத்தது. ஆனால் பசுமைப் புரட்சி எமக்கு உணவு உற்பத்தி செய்ய வழிசமைத்து கொடுத்தாலும் பின்னர் அதனை சூழலை மாசுபடுத்தியதற்காக குறைபட்டுக் கொண்டதையும் எமக்கான பாடமாக நல்ல அனுபவமாக கொண்டு இனிவருங்கால உணவுற் பத்தியை செம்மைப்படுத்த வேண்டும். பரந்து பட்ட உணவுற்பத்தி தேவையை சிறிய விவசாயி களை மையப்படுத்தியே உலக உணவு ஸ்தாப னம் பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக மேற் கொள்ள முனைந்திருப்பதை றியோ+20 ஆய்வு மாநாடு முன்னிலைப்படுத்தியிருப்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். குடும்ப வேளாண்மையின் முக்கியத்துவம் அதிலிரு ந்தே ஆரம்பித்திருக்கின்றது எனலாம். குடும்ப வேளாண்மையின் தாற்பரியம் எமது மக்களுக் கான நஞ்சற்ற உணவினை உற்பத்தி செய்யும் அதே வேளையில் அவர்களுக்கான உணவினூ டாக மக்களுக்கு தேவையான ஊட்டச்சத்தினை யும் சேர்த்துக்கொடுக்க முனைந்திருக்கின்றது. மொத்தமாக அசேதன இரசாயனத்தை உள்வாங் கிய பயிர்ச்செய்கை முறைக்கூடாக நாம் உண வினை உற்பத்தி செய்ததை தவிர்த்து இயன்றள வில் குறைத்து நிறைவாக சேதனமுறை மூலமாக உணவினை உற்பத்தி செய்ய குடும்ப வேளாண்மை முயற்சிக்கும் எனலாம்.

குடும்ப வேளாண்மையில் உணவினை உற்பத்தி செய்யும் போது அது வீட்டுத்தோட்டத் தில் நாம் பெறுகின்ற பயன்களனைத்தையும் உள்வாங்கியதாக இருக்கும் என்ற நம்பிக்கை தற்போது அனைவருக்கும் உண்டு. நாம் இன்னும் வீட்டுத்தோட்டத்தின் பயன்பாடுகளை முழுமை யாக உணரவில்லை. வீட்டுத்தோட்டம் என்பது நாம் எண்ணுவது போல வெறுமனே உணவுற் பத்தி செய்வது மட்டுமல்ல. அல்லது அழகுக்காக வீட்டிலே வர்ண இலைத்தாவரங்களை வைத்தி ருப்பதும் அல்ல. மாறாக வீட்டுக்குக்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்வதுடன் பழங்கள், கிழங்குகள், என பலவகைகளை உள்ளடக்கிய தாக இன்னும் விற்றமின்கள், நார்ச்சத்து, இலைச் சத்து என்பனவற்றையும் கொண்டிருக்க வேண்டும். நாளொன்றுக்கு ஒரு இலை என்ற வீதம் சிறுகீரை, வல்லாரை, பொன்னாங்காணி, அகத்தி, பொதினா, சண்டி, முருங்கை, பசளி, இவ்வாறாக பலவுண்டு. முருங்கை இலையிலு ள்ள சத்துக்களை அறிந்தால் அதுவே நிறைவான சத்துணவை தந்துவிடும். வீட்டில் நிச்சயமாக இரண்டு முருங்கையிருக்க வேண்டும்.

வீட்டுத் தோட்டத்தில் வளர்க்கப்படு கின்ற தாவரங்கள் மகரந்த சேர்க்கையாளர் களை கவர்வதற்காக பூக்கும் தாவரங்களை கொண்டிருக்க வேண்டும். அழகுக்காக பூக்கும் தாவரங்களை வளர்ப்பது வீட்டுத்தோட்டத்தில் முக்கியமானதாகும். பூக்கும் தாவரங்களை தெரிந்தெடுத்து வீட்டுத்தோட்டத்தில் வளர்ப்பது எமக்கான கலையாகும். சாதாரணமாக எமது பிரதேசத்தில் வளரும் பூக்கும் தாவரங்களை நாம் பயன்படுத்தி அதனை அழகுக்காக வளர்க்க ஆரம்பிக்கும் போது அது மகரந்த சேர்க்கை யாளர்களை குறிப்பாக தேனீக்கள், குளவிகள், வண்ணத்துப்பூச்சிகள், வண்டுகள் இன்னும் சிறிய பறவைகள் ஆகியனவற்றை விரும்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவரும். இதன் மூலமாக எமது வீட்டுத் தோட்டத்தில் நன்மை தரும் உயிரினங்களின் நடமாட்டத்தை நாம் அதிகரித்துக்கொள்ளலாம். உயிருள்ள வீட்டுத்தோட்டமாக நாம் உருவாக்குவதே எமது குடும்ப வேளாண்மையின் எதிர்பார்ப்பினை பூர்த்திசெய்வதாக இருக்கும்.

சூழலியல் விவசாயத்தின் தேவை எமது விவசாய செய்கையில் ஏற்கெனவே உணரப்பட்டிருப்பதும் குடும்ப வேளாண்மையில் இதனது பயன்பாடு அதிகமாக உள்வாங்கப்பட வேண்டியிருக்கின்றது. எமக்கிருக்கும் உள்ளூர் வளங்களை நாம் முறைப்படி இருக்கின்ற தொழில்நுட்பத்தை உள்வாங்கி செயற்படுத்தும் போது குடும்ப வேளாண்மையின் தேவை பூர்த்தி செய்யப்படும்.

நம்நாட்டு விவசாயம் திசைமாறி தற்போது அசேதன இரசாயனங்களின் பயன்பாடின்றி விவசாயச்செய்கை இல்லை என்றாகி விட்டது. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண குடாநாட்டு விவசாயப் பெருமக்களின் பயிர்ச்செய்கையில் அன்றாட பயன்பாட்டு பொருளாக விவசாயத்திற்கான முதலீடுகளில் அசேதன நச்சுப் பொருட்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இது பற்றிய கரிசனை பலரிடமும் பலமட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அவசியம் எதிர்கொள்ள வேண்டிய விடயமாகவும் அதற்கான தீர்வினை எட்டுவதற்கான வழிமுறைகளையும் நாமே கண்டுபிடிக்க வேண்டும். அசேதன இரசாயனங்களில் பசளைகள், பீடை நாசினிகள் மற்றும் பூப்பதைத் தூண்டும் ஓமோன்கள், தாவர வளர்ச்சி ஊக்கிகள், கனிய வைத்தல் என பலவகைப்பட்டன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினது பக்கவிளைவுகள் பற்றி ஆய்வறிக்கைகள் தெரிவித்தாலும் அவற்றினால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றி இன்னும் ஐயப்பாடுகள் இருக்கவே செய்கின்றது. தீங்கற்றதென கூறப்பட்ட இரசாயனங்களினால் ஏற்படும் பின்விளைவுகள் பின்நாட்களில் பாரதூரமானதாக இருப்பதை காலங்கடந்து அறியமுடிகின்றது. இது ஒருபக்கமிருக்க பயன்படுத்தப்படும் நச்சு இரசாயனங்களினால் ஏற்படும் தாக்கங்கள் மனிதனிலும் சூழலிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துவதாலும் அவற்றிலிருந்து மீள வேண்டிய அவசியத்தை உணர்ந்ததாலும் அசேதன இரசாயனங்களுக்குப் பதிலாக மாற்றுமுறைகளை பரிந்துரைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாமனைவரும் உள்ளோம். விவசாயப் பெருமக்களும் இந்த விளைவுகளைப்பற்றி அறிந்து சிந்தித்து பயன்படுத்தும் அசேதன இரசாயனங்களின் அளவை கணிசமான அளவிற்கு குறைக்க ஒத்துழைக்க வேண்டும். பரிந்துரைப்பவர்களுக்கும் பயன்படுத்துபவருக்குமான புரிந்துணர்வு இங்கே எய்தப்படல் வேண்டும் என்பதோடு மாற்று வழிகளுக்கான நஞ்சற்ற முறைகளை விவசாய பெருமக்கள் இலகுவாக பெறுவதற்கும் ஆவன செய்ய வேண்டும்.

மாற்று வழிகளில் பலவற்றை பரிந்துரைக்கலாம். உயிர்ப்பசளைகள், உயிர்க்கொல்லிகள் (பூச்சி மற்றும் பூஞ்சண கொல்லிகள், களைக் கொல்லிகள்) மற்றும் இரைகௌவிகள், ஒட்டுண்ணிகள் மற்றும் நுண்ணங்கிகள் என பலவகைகளுண்டு. இவற்றைப்பற்றிக ஆய்வுகளும் நிறையவே செய்யப்பட்டிருந்தாலும் எமது பிரதேசத்திற்கு உகந்ததான அங்கிகளை இனங்கண்டு அவற்றை இனம்பெருக்கி விவசாய பெருமக்கள் இலகுவாகவும் மலிவாகவும் பெற ஆவனசெய்ய செய்தல் வேண்டும். இன்னும் இவ்வகையான நுண்ணங்கிகள், அங்கிகள் பற்றிய ஆய்வுகள் முடுக்கிவிடப்படல் வேண்டும். இவற்றை பயன்படுத்தும் போது அசேதன பசளைகளின் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றம், பயிர் விளைச்சலில் ஏற்படுத்தும் மாற்றம், குறிப்பாக சூழலில் ஏற்படுத்தும் மாற்றம் என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். இவற்றுக்காக இத்துறை சார்ந்த மாணவர்களை பயிற்றுவிக்கவும் வேண்டும். இவ்வாறானவற்றை பயன்படுத்தும் போது அவற்றினது தரம் நிர்ணயஞ் செய்யப்பட வேண்டியதுடன் அதனை தொடர்ந்தும் கண்காணிப்பதற்கு உரிய வழிவகைகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசேதன இரசாயன பசளைகளைப் போல உயிர்ப்பசளைகள் விரைந்து தொழிற்பட மாட்டாதவை. அதனால் பயிர்களில் உயிர்ப் பச ளைகளின் தாக்கம் உடனடியாகத் தெரிவ தில்லை. இது விவசாயப் பெருமக்களிடையே உயிர்ப்பசளைகளினை பயன்படுத்துவதில் தற் காலிக பின்னடைவை தோற்றுவிக்கும். ஆனால் அசேதன இரசாயன பசளைகளைப் போலன்றி உயிர்பசளைகளும் நுண்ணங்கிகளும் நின்று பெருகி மண்ணுக்கு வளஞ்சேர்ப்பனவாகும். காலப்போக்கில் உயிர்ப்பசளைகளினது தாக்கம் மண்ணிலும் பயிரிலும் உணரப்படும்.

உயிர்ப்பசளைகளை பயன்படுத்துவது விளைநிலத்திற்கும் பயிருக்கும் நல்லது. அத்துடன் அதனால் சூழல் வளப்படும். இயற்கை யுடனான விவசாயத்திற்கான திறவுகோலாக அது அமையும். எமது சூழல் தொகுதி தனித்து வமானது அத்துடன் அந்நியதேசத்திலிருந்து நுண்ணங்கிகளை வரவழைக்காமல் எமது பகுதி யில் உள்ள வளமான அங்கிகளைப் பிரித்தெடு த்து அவற்றை இனங்கண்டு அவற்றினது பீடை கட்டுப்படுத்தும் ஆற்றல் அல்லது தாவரத்திற் கேற்ற பசளைப் பெறுமானத்தை ஈடுகட்டும் வழி வகைகளை அறிதல் வேண்டும். உயிர்ப்பசளை கள் தாவரத்திற்கு எதுவித தீங்கையும் ஏற்படுத் தாது. மேலும் இவ்வாறான அங்கிகள் இங்குள்ள சூழலில் அதிகமாக பெறக்கூடியதாக இருப்பத னால் இங்கும் அவை பல்வேறு தாக்கத்திற்கு உட்பட்டிருக்க வாய்ப்புண்டு. அத்துடன் உயிர்ப் பசளைகளை கழிவுப்பொருட்களிலிருந்து உற் பத்தி செய்தால் சாலையோரம் தேங்கிக் கிடக் கும் குப்பைகளுக்கு கழிவகற்றல் திட்டத்தின் மூலம் விமோசனமும் கிடைக்கும். வீட்டில் சேரும் தாவரக்கழிவுகளை சொப்பிங்பையில் சேர்த்து வைத்திருக்கின்றமையும் வசதிவரும் போது இலாவகமாக எடுத்துச்சென்று ஸ்ரைலாக பாதையில் வீசிவிட்டு செல்வதையும் அவதானி க்க வேண்டும். தெருவில் வாழும் நாய்களுக்கு இவை நொறுக்குத்தீனியாக பாதைமுழுவதும் இவ்வாறான கழிவுகள் பரந்துபட்டு இருப்பதை யும் பாதையில் பயணிப்போருக்கு அசௌகரிய த்தை ஏற்படுத்துவதையும் காணலாம். குறிப்பாக எமது பாடசாலைப் பிள்ளைகள் மிகவும் சிரமப் பட்டு இவ்வாறான கழவுகளுக்கூடாக அருவரு த்து நடந்து செல்வதையும் காணலாம்.

வடமாகாணத்தின் வளங்களென்றால் விவசாயம், மீன்பிடி, கால்நடைகள் மற்றும் மனிதவளம் என் நான்காக குறிப்பிடுவார்கள். ஏனைய தொழிற்றுறைகள் இவ்வளங்கள் சார்ந்து உருவாகியவை எனலாம். மனித வள த்தை மேம்படுத்துவதற்காக கல்வியை முழுமை யாக பயன்படுத்தினால் கல்வியும் வளர்ந்து, கற்ற லறிவுடையவர்களும் உள்வாங்கப்பட்டு இவ்வூர் இன்னொரு பரிமாணத்திற்குள் உயர்த் தப்பட்டு விடும். வளங்களை நாம் பயன்படுத்த முடியு மாயின் பல்துறைசார்ந்த தொழிற்று றையை சிறிது சிறிதாக உள்வாங்கலாம்.

பெரியவர் திரு லட்சுமிகாந்தன் அவர் கள் இவ்வூரின் பாரம்பரியத்தை. வரலாற்றினை எடுத்தியம்ப வேண்டியதை புதககவடிவில் ஆக்கி யமை மகிழ்ச்சிக்குரியது. இந்தபணி மேன் மேலும் சிறக்க வேண்டும். இன்னும் வரலாறு நீண்டு செல்லும் போது அவை ஆவணமாகி கட்டைப்பிராயின் உள்ளடக்கிடக்கைகளை ஏனையவர்களும் அறிந்திட எழுதும் முயற்சி மேற்கொள்பவர்களுக்கு அம்மா முத்துமாரியின் ஆசீர்வாதம் கிடைத்திட இக்கைகள் என்றும் பிரார்த்திக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டப்பிராய் மாண்மியம்

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்புப் பல்கலைக்கழகம்
உறுப்பினர் வடக்கு மாகாண சபை

ஒவ்வோர் ஊருக்கும் ஓர் தனித்துவம் இருக்கும் ஓர் ஊரின் கிராமங்களிடை சில பொதுமைப்பாடுகள் காணப்படும் அதே சமயம் சில தனித்துவங்களும் காணப்படும். ஊரின் இயற்கை (பூகோள) அமைவு, அதன் சமூக கட்டமைப்பு, சமூக உறவுகள், பொருளாதார அடிப்படைகள், அரசியற் போக்கு, ஆன்மீக நிலைகள் சமூக நிறுவனங்களும் அவற்றின் செயற்பாடுகளும் என பல்வேறு அம்சங்களில் தனித்துவமும் பொதுமைப் பாடும் காணப்படலாம். ஆசிய மக்கள் பெரும் பாலும் நிலத்தோடு பிணைந்த இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள். மண்ணின் மகிமைக்கு முக்கியத்துவம் தருப வர்கள் நான் பிறந்த மண் என்று பெரும்பா லானோர் பெருமையாக தமது ஊரை, கிராம த்தை மேன்மையாக மதிக்கும் தன்மையுடை யவர்கள். திரைகடலோடினாலும் இறுதியில் நான் பிறந்த மண்ணிலேயே இறுதி வாழ்க்கை அமைய வேண்டும் என விரும்பு வோர் அதிகம். அந்தளவுக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் தான் பிறந்து, தவழ்ந்து, வாழ்ந்து வளர்ந்த மண் பெருமைக்குரியது.

இவ்வகையில் இலங்கைத்தீவின் வடமுனையாம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் விவசாயப் பெருநிலமான கோப்பாய்ப் பிர தேசத்தின் தென்பகுதியில் அமைந்த ஊர் கட்டப்பிராய். யாழ்ப்பாண இராட்சியத்தை ஆட்சி செய்த சங்கிலியனின் ராஜதானியான நல்லூரை ஒட்டிய இக்கிராமம் மன்னர் பரம் பரைக்கு தானியக் களஞ்சியத்தை நிரப்பு வதில் முன்னணி வகித்த ஒன்றாகும். அன்றைய சமூகத்தில் அரச குடும்பம் அமைச்சர்கள் என்போரின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேவைகளின் அடிப் படையிலான வேலைப் பிளவுகளும் வேலைப் பிரிவின் அடிப்படையில் சமூகப் பிரிவுகளும் உருவாக்கப்பட்டன.

இச்சமூகப் பிரிவுகள் சமூகப் படிநிலை களைக் கொண்டதாகவும் அதன் அடிப்படை யில் கட்டமைக்கப்பட்ட சமூக உறவு நிலைக ளைக் கொண்டதாகவும் இருந்தது. யாழ் குடாநாடு என்பது இலங்கைத் தமிழ் சமூகத் தின் மூத்த நாகரிகமாகவும் கலாசார மைய மாகவும் கருதப்படும் சான்றாகும். இங்கு கோப்பாய் பிரதேசம் என்பது ஆண்டு முழுவ தும் பசுமையாகக் காட்சிதரும் காய்கறிகள், பழங்கள், தானியங்கள், பனை, தென்னை, மா, பலா, வாழைத் தோப்புக்களையும் கொண்ட பெருமளவு சுயசார்பு பொருளாதார அடிப் படைகளைக் கொண்ட ஓர் பிரதேசம் என்றால் கட்டப்பிராய் இப்பிரதேசப் பண்புகளை துல்லியமாகப் புலப்படுத்தும் ஓர் சிறந்த மாதிரிக் கிராமமாகத் திகழ்ந்து வருவது சான்றாகும்.

கட்டப்பிராயின் பூகோள அமை வானது பன்முகத்தன்மையும் செழிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட சான்றாகும். கிழக்கு தெற்காக பல்வேறு சமூகப் பிரிவு மக்களைக் கொண்ட குடியிருப்புக்களும் மேற்கே அவர்களதும் அவர்களின் உறவுகளும் குடியிருப்புக்களும் இவர்களின் சுய தேவையைப் பூர்த்தி செய்யும் பழம்மிகு பசுமை நிறைந்த காய்கறி பழத்தோட்டங்களையும் கிழக்கே இம்மக்க ளின் பனந்தோப்புகளும் பரந்து விரிந்த வயல்களிடையே குளங்கள், கேணிகள் என நீர்நிலைகளும் பனந்தோப்பின் மத்தியில் இம்மக்களின் தோட்டங்கள் வயல்களில் வேலை செய்யும் குடும்பங்களின் குடியிருப் புக்களுமாக ஓர் அழகிய கிராமம் பனந் தோப்பு குடியிருப்புகள் இன்று குடியிருந்த வர்களுக்கே வழங்கப்பட்டு விட்டது. இக் கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம் மன் திருத்தலம் தெற்காக மதுரை மீனாட்சி யம்மன் ஆலயம் தென்மேற்காக வயல்வெளி கந்தசுவாமி திருத்தலம் மேற்காக கல்வியங் காடு வீரபத்திரர் ஆலயம் வடக்கில் கற்பக விநாயகர் திருத்தலங்கள் என தெய்வத் திருத்தலங்கள் சூழ்ந்த கிராமம்.

இவற்றுக்கு மேலாக கட்டப்பிராய் மக்களின் சமூக கல்வி, பொருளாதார, கலாச் சார மற்றும் உடலாரோக்கிய செயற்பாடு களை செயற்படுத்தவும் வழிநடத்தலாமென 60 ஆண்டுகட்கு முன்னரே உருவாக்கப்பட்டு செயற்பட்டு வந்த கலைமணி சனசமூக நிலையம் என்பது இப்பிரதேசத்திலேயே முன்னோடியானதும் மூத்ததுமான ஓர் நிலையமாகும்.

உலக நடப்புகளை எமது மக்கள் தெரிந்து கொள்ள பத்திரிகைகள், அறிவை யும் ஆற்றலையும் வளர்க்கும் கட்டுரை, கவிதை பேச்சுப் போட்டிகள், துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என தினசரியான விளையாட்டுகள் தவிர பெரிய அளவிலான வருடாந்த இல்ல மெய்வல்லு னர் போட்டிகள், சைக்கிள், மரதன் ஓட்டப் போட்டிகள் - பாரிய வினோத உடைப் போட்டிகள் என உடலாரோக்கியத்தை மையமாகக் கொண்ட விளையாட்டுகள் பெண்கள் வாழ்வாதரத்தை வலுப்படுத்தும் தையல், மனையியல் போன்ற பயிற்சிகள் - விவசாயத்துறையில் சிறப்பாக செயற்பட ஆலோசனைகள், தாய்சேய் ஆரோக்கியம் பேணும் சுகாதார சேவைகள் என மிகச் சிறந்த சமூகசேவையினை ஆற்றிய நிலைய மாக 1980களில் இச்சனசமூக நிலையம் வளர்ச்சியடைந்திருந்தது. சமூக முன்னேற் றத்திற்கு அர்ப்பணிப்பாக உழைக்கும் இளை ஞர்கள், ஆலோசனை கூறும் முதியவர்கள், ஆதரவு தருபவர்கள் என நன்று இறுக்க மாகக் கூட்டப்பட்டிருந்த கட்டப்பிராய் சமூகம் குடாநாட்டின் ஏனைய பல கிராமங்கள் போல் தனது பாரம்பரியத்தை சமூக கட்ட மைப்பையும் பெருமளவும் இழந்து இன்று மீண்டெழும் முயற்சியில் நடை போடுகிறது.

சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி ஆன்மீக மற்றும் விளையாட்டு என மனித சமூகத்தின் அனைத்துத் தேவைகளை யும் நிறைவு செய்யும் கட்டமைப்புக்களை உருவாக்கி செயற்படுத்த முடித்ததென்றால் கட்டப்பிராயின் சமூக சிந்தனை மிக்க மக்களே அதன் அடித்தளம். ஆசிரியர்கள், அதிபர்கள், துறைசார் அதிகாரிகள் அறிஞர் கள் என கற்றவர்களை எமது கிராமம் உரு வாக்கி வளர்த்து வந்தது. அவர்கள் கிராமத் தினை வளர்த்தார்கள்.

இன்று தனது 70வது பிறந்ததினத் தைக் கொண்டாடும் திருவாளர் லக்சுமி காந்தன் திருமண உறவால் கட்டப்பிராயின் மைந்தனானபோதும் கடந்த 3 தசாப்தங்களு க்கு மேலாக கட்டப்பிராயின் பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிகளிலும் அதற்கு வெளியிலும் அவரது பங்களிப்பில்லாத வளர்ச்சிகளைக் காண்பதரிது. பாடசாலை அபிவிருத்தி செங்குந்த இந்துக் கல்லூரி), லயன்ஸ் கிளப்பினூடாக சமூக சேவை, மயானத்தை நவீனப்படுத்தல், கோவில் திருப்பணி – நிர்வாகம் மற்றும் சனசமூக வளர்ச்சி என பன்முனை வளர்ச்சியில் அவர் பங்கு அளவிடற்கரியது.

கட்டப்பிராய் என்பது கோப்பாய் தொகுதியின் முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களில் ஒன்று. இலங்கை சுதந்திர மடைந்தது முதல் 1948 தேர்தல் தொடக்கம் இன்றுவரை ஒரு தேர்தலில் கூட பிசகாமல் தமிழ்த் தேசியத்தின் பால் உறுதியாக நிற்கும் ஓர் தொகுதியாகும். 1வது தேர்தலில் வடக்கில் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட அனைவரும் தோற்ற போது கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்தை வெற்றி பெற வைத்தது கோப்பாய் கட்டப்பிராய் கிராம மும் 1948இல் இருந்து உள்ளூராட்சி தேர்தல் முதல் பாராளுமன்ற தேர்தல் உரை தடம் மாறாது தமிழத் தேசியத்தின் பால் செயற் பட்டு வருகின்ற ஓர் கிராமம் என்பதில் நாம் பெருமையும் உவகையும் அடையலாம்.

கோப்பாய் கோமான் வன்னிய சிங்கம் சிந்தனை சிற்பி கதிரவேற்பிள்ளை என தமிழ்த்தேசிய வாதிகளுடன் தோழோடு தோழ் நின்ற கட்டப்பிராய் விடுதலைப் போராட்டத்தில் தலைவர்களை போராளிக ளையும் உருவாக்கிய கிராமம். மேற்கூறிய தலைவர்களைத் தொடர்ந்து எமது கிராமத் தின் புதல்வரான சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமை தாங்கும் விடுதலைப் போராட்டத் தின் பங்குதாரர் ஆகிய கந்தையா ரவீந்திரன் மக்களுக்காக தன்னுயிரை ஈர்த்தான்.

வன்னியசிங்கம், கதிர்வேற்பிள்ளை வரிசையில் ஓர் போராளியாக, சிறந்த பேச் சாளனும், தமிழினத்தின் முன்னனி அரசியல் தலைவர்களுள் ஒருவராக தமிழ்த் தேசியக் கட்டமைப்பின் உத்தியோக பூர்வ பேச்சாள ராக, அரசியல் முதுமானிப் பட்டதாரியான சுரேஷ் பிரேமச்சந்திரனை கட்டப்பிராய் பெற்றெடுத்து பெருமையைப் பெறுகிறது.

பாடசாலை மாணவராக சமூகத்தின் பன்முக செயற்பாடுகளிலும் 70களின் பிற்பகுதி 80களின் முற்பகுதியிலும் பணி யாற்றிய சமூக சிந்தனையாளரான அரசியற் கலாநிதி சர்வேஸ்வரனை எமது மண் பெற்றிருக்கிறது. கொழும்பு பல்கலைக் கழகத்தில் 1994இல் இருந்து விரிவுரையாள ராகப் பணியாற்றிய மூத்த விரிவுரையாளர் இன்று மக்கள் சேவையில் தன்னை இணைத் துக் கொண்டு மாகாண சபை உறுப்பினராக பணியாற்றும் இவரைப் பெற்றெடுத்ததும் எமது கிராமமே.

எமது கிராமத்தின் சமூக மேம்பாட்டி ற்கு உழைத்த ஊக்குவித்த ஆதரவளித்த எம்மவர் பலர் இனனும் வெளிநாடுகளில் பல்வேறு துறைகளில் சிறப்புற்று விளங்கு கின்றனர். எமது ஸ்ரீமுத்துமாரியம்மன் ராஜ கோபுரம் அழகுற எழுந்து நிற்பதற்கு எமது கிராமத்தில் புலம்பெயர் பிள்ளைகளே பேருதவி புரிந்துள்ளனர். ஒவ்வோர் ஆண்டு திருவிழாவிலும் மாறிமாறி அவர்கள் வந்து சிறப்பிக்கின்றனர். இத்தனை சிறப்பான கிராமமும் அதன் மண்வாசனை மிக்க மக்க ளும் மேலும் சிறப்புற அம்மன் அருள்பாலிப் பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகப் பணிகளின் பதிவுகள் சில...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய வளங்களும் முதலீட்டுக்கான வாய்ப்புக்களும்

Dr.S.விஜயகுமார்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
பொருளியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்.

**1. அறிமுகம்**

இலங்கை இந்தியாவுக்கு தென்கிழக்கே இந்து சமுத்திரத்தினால் சூழப்பட்ட, 65610 sq.km பரப்பளவு கொண்ட, இயற்கை வளம் மிக்க ஒரு நாடாகும். இயற்கை வளங்களையும் சுற்றுலாத்துறைக்கான கவர்ந்திழுக்கும் இயற்கை அழகையும் கொண்ட அழகான தீவாகும். இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் ஒரு உலர் வலயம் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. 1020 sq.km (102323hec) பரப்பளவைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் 35% நிலம் விவசாயத்துக்கும், 22% கட்டிட நிர்மாணத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது. 5% நிலம் lagoon ல் சூழப்பட்டுள்ளது. 32% மான நிலமானது பாறைகள் (Rocky land), மணற்பாங்கான திட்டுகள் (Sand), சதுப்பு நிலம் (Marsh) ஆகியவற்றிற்குரியதாகவும், 6% நிலம் பயிர்செய்கைக்கு உட்படாது விடப்பட்டுள்ளது. கிளிநொச்சி (1281sq.km) மன்னார் (2002 sq km), முல்லைத்தீவு (2517 sq km) வவுனியா (1967 sq km) ஆகிய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ்மாவட்டமானது மிகக் குறைந்தளவான நிலப்பரப்பை கொண்டிருக்கின்ற போதும் சனத்தொகையும் சனத்தொகை அடர்த்தியும் மற்றைய மாவட்டங்களைவிட அதிகமாகும்.

**2. நிலப்பயன்பாடு**

Table 1 : Land use patter in Jaffna District

| Category | Area(hectares) | |
|---|---|---|
| 01 | Paddy | 7598 |
| 02 | Arable crops | 11183 |
| 03 | Fruit crops | 1819 |
| 04 | Coconut | 2918 |
| 05 | Palmyra | 12775 |
| 06 | Economic trees | 870 |
| 07 | Rocky lands | 3000 |
| 08 | Sandy soil or shrubs | 12000 |
| 09 | Saline Alkaline & Barren lands | 16000 |
| 10 | Buildings, Roads other Homestead lands | 22000 |
| 11 | Area under Inland water | 4160 |
| 12 | Land which cannot be cultiveted | 2000 |
| 13 | Land damaged by permanent crops | 6000 |
| 14 | Total | 102323 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்மாவட்டமானது உலர்வலயமாக இருக்கின்றபோதும் விவசாயிகள் அல்லது மக்களின் கடின உழைப்பு அம்மாவட்டத்தின் சிறப்பான நிலைக்கு காரணமாகும். கடின உழைப்பு, சேமிப்புப்பழக்கம், இறுக்கமான கலாச்சாரம், கல்விக்கு முன்னுரிமை என்பன இம் மாவட்ட மக்களின் பொதுவான சிறப் பியல்புகளாகும். 30ஆண்டு யுத்தத்தினால் இம் மாவட்டம் அதிகளவு நெருக்கடிகளிற்குள்ளான போதும் மிகக்குறுகியகாலத்தில் பொருளாதார ரீதியாக அது சாதாரணநிலைக்கு வந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளின் உள்ள புலம்பெயர் மக்க ளின் பணவருகையே பிரதான காரணமாகும். இவ்வாறான தன்மையை கொண்டிருக்கின்ற யாழ் மாவட்டத்தில் தற்போதுள்ள முதலீட்டுக் கான வாய்ப்புக்களை நோக்குவோம்.

கிடைக்கக்கூடிய இயற்கை வளங்கள்

Salt
Silicon
Clay
Limestone
Energy resources
Fish resource
Livestock
Fecund farm land

**3. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்**

(Small and and Medium Enterprises)

சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மாத்திரமே யாழ் மாவட்டத்திற்கு பொருத்த மானது (இழிவு நிலையில் சூழல் மாசுவினை கொண்ட). யாழ்ப்பாண குடாநாடானது இலகு வில் மாசுவினால் ஊறுபடத்தக்கவகையில் அமைந்துள்ளது. எனவே பாரிய கைத் தொழிலை உருவாக்குவது பொருத்த மற்றது. சிறிய நிலப்பரப்பை கொண்ட அதிக சனத் தொகை அடர்தியை கொண்ட குடாநாட்டில் பாரிய கைத்தொழிலை உருவாக்குவது பொருத்த மற்றது. தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

காங்கேசன் துறை சீமெந்து ஆலையை மீண்டும் இயக்கவைப்பது ஆபத்தானது வேலை வாய்ப்புக்களை இதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய தாக இருந்தாலும் சீமெந்து ஆலையை இயக்க வைப்பதன் மூலம் உருவாகும் சூழல் மாசாகும் பிரச்சினை மிகத் தீவிரமான பிரச்சனை யாகும். குறிப்பாக உலர்வலயமான யாழ் மாவட்டமானது குடிநீர் விவசாயம் வீட்டுத் தேவை போன்றவற்றிற்கு நிலத்தடி நீர் முழுமை யாக தங்கியுள்ளது. இரணைமடு நீர்த்திட்டமும் பல்வேறு காரணங்களால் சாத்தியமற்று காணப் படுகிறது. இந்நிலையில் சீமெந்து தொழிற் சாலை போன்ற பாரிய தொழில் உருவாக்கி னால் யாழ் மாவட்டத்திற்கு கிடைக்கும் பயன் மிக குறைவாகும். மாறாக தீமைகளும் பிரச்சினைகளுமே அதிகமாகும். இங்கு கூறக் கூடியது யாதெனில் மாவட்ட அடிப்படையில் சுய தேவை என்றவகையில் நோக்கும்போது யாழ் மாவட்டத்தின் சீமெந்துக்கான கேள்வி அவ் வளவுக்கு உயர்வானது இல்லை. யாழ் மாவட்டத் திற்கான, வடமாகாணத்திற்கான சீமெந்திற்கான கேள்வியை இந்தியாவிலிருந்தோ அல்லது தென்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் சீமெந் தின் மூலம் இலகுவாக பூர்த்தியாக்கமுடியும். அது மாத்திரமில்லை இங்கு உற்பத்தி செய்வதை விட குறைந்த செலவில் நாம் தென் பகுதியிலிரு ந்தோ இந்தியாவிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும். ஏனெனில் சீமெந்து உட்பட்ட பாரிய தொழிற்துறைகள் சிறிய யாழ் குடாநாட்டு புவியியல் அமைப்புக்கு ஏற்படுத்தும் அழிவு பாரதூரமானதாகும். அமெரிக்காவில் அதிகள வான எண்ணை வளங்கள் இருக்கின்றபோதும் அது மத்திய கிழக்கில் இருந்தே அதிகளவு எண்ணையை பெற்றுக்கொள்கிறது. காரணம் சூழல்செலவு. உற்பத்தி செலவு என்றவகையில் நோக்கும்போது தனது நாட்டில் இருந்து எண்ணைவளத்தை எடுப்பதைவிட இறக்குமதி செய்வது மலிவானது என அமெரிக்கா கருது கின்றது. இங்கு செலவு என்பது உற்பத்தி செலவை மாத்திரம் நாம் கருதக்கூடாது குறித்த உற்பத்தி தொடர்பாக ஏற்படக்கூடிய வளத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேய்வு மற்றும் சூழல் மாசு போன்றவையும் கவனத்தில்கொள்ளப்படல் வேண்டும். எனவே சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மாத்திரமே யாழ் மாவட்டத்திற்கு பொருத்தமானது. (இழிவு நிலையில் சூழல் மாசுவினை கொண்ட) இவ் வகையில் மாகாண அரசு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஊக்கவிக்கும் நடவடிக்கை களில் கவனம் செலுத்த வேண்டும்.

**4. மென்குடிபானக் கைத்தொழில்கள்**

(Rined fruits, juice, jam)

இவ்வகையில் விவசாயம் சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் யாழ்ப்பாண குடாநாட்டிற்கு மிகப்பொருத்தமானதாகும். யாழ் மாவட்டம் உலர்வலயமாக இருக்கின்ற போதும் நிலத்தடி நீர்மூலம் உச்ச அளவான விவசாய நடவடிக்கைகள் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வகையில் பப்பாயி வாழைப்பழம், முந்திரிகை, மாம்பழம், தக்காளிப்பழம் போன்ற பழவகைகளைப் பயன்படுத்தி செய்யக்கூடிய கைத்தொழில்களை விரிவாக்க வேண்டும். குறிப்பாக பப்பாளி மற்றும் வாழைப்பழத்தின் விளைச்சல்கள் மிக அதிகமாகவுள்ளது. மிக அதிகமான இவ்வுற் பத்திகள் சில பருவங்களில் வீணடிக்கப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது. வீட்டுத்தோட்ட அடிப்படையில் பப்பாளி வாழைப்பழம் போன்ற வற்றை உற்பத்தி செய்வோர் அதனை விற்பனை செய்யமுடியாத தன்மையும் காணப்படுகிறது. அண்மைக்காலமாக மென்குடிபானத்துக்கான கேள்வியும் குறிப்பிடத்தக்களவில் உயர்ந்தே சென்றுள்ளது. மிக சாதாரண நிகழ்வுகளில் இருந்து திருமணவீடு பிறந்தநாள் பூப்புனித விழா உட்பட எல்லா விழாக்களிலும் மென்குடி பானங்கள் மிக பிரதான இடத்தை வகித்து வருகின்றது. 2000 ஆண்டுக்கு முற்பட்ட நிலை அவ்வாறானதல்ல. இவ்வாறாக நுகர்வோர் சுவை தெரிவுகளில் ஏற்பட்ட மாற்றத்தினால் பெப்சி கொக்கக்கோலா உட்பட்ட வெளிநாட்டு பானங்களே நன்மையடைந்திருக்கின்றன.

உள்ளூர் சிறிய நடுத்தர தொழில் முயற்சியாளருக்கு முன்னால் உள்ள மிக முக்கிய சவால் யாதெனில் எவ்வாறு நுகர்வோர் விருப்பு அல்லது தெரிவினை தமது உள்ளூர் மென்குடிபானங்களை நோக்கி நகர்த்துதல் என்பதாகும். ஐரோப்பிய நாடுகளில் மொத்த வேலை வாய்ப்பில் 70-80மான வேலை வாய்ப்பினை சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங் களே வழங்கி வருகின்றன பெரும் கைத் தொழில் நிறுவனங்களின் பங்கு வேலை வாய்ப் பில் மிககுறைவாகும். எனவேதான் ஐரோப்பிய நாடுகளிலுள்ள அரசுகள் அவற்றிற்கு முக்கியத் துவமளித்து வருகின்றன இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஊக்கு விப்பது போதுமானதாகவில்லை. ஒரு தூர நோக்குள்ள அதிகாரத்தை கொண்டுள்ள அரசினால் அல்லது மாகாண அரசால் தன் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் இவ்வாறான சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கு தூண்டுதல் அளிப்பது, சாதகமான பேரண்ட சூழ் நிலைகளை ஏற்படுத்திக்கொடுப்பது அவசியமாகும். அவ் வகையில் வடமாகாண அரசு இது பற்றி சிந்தித்த தாக தெரியவில்லை. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஊக்குவிக்க அவர்களிற்கு தேவையான வசதிகளை வழங்க திட்டமுன் மொழிவுகள் ஏதும் உள்ளதாக தெரியவில்லை. யாழ் மாவட்டத்தில் உள்ளூர் மென் குடிபானங் களிற்கான கேள்வியை பேணுவதில் மாகாண அரசுக்கு முக்கிய பங்கு உண்டு. அண்மையில் மாகாண விவசாய அமைச்சர் அரசு விழாக்க ளில் உள்ளூர் மென்குடிபானங்களை மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்திருந் தார். இங்கு செயலாக்கம் முக்கியமானது. மென் குடிபானங்களின் சுவை மற்றும் விலையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக யாழ்மாவட்ட பழ உற்பத்திகள் அதிகரிப்பதன் மூலமும் வேறு வழிமுறைகள் மூலமும் வெளி நாட்டு குடிபானங்களைவிட உள்நாட்டு குடி பானத்தின் விலையை குறைந்த மட்டத்தில் பேணுவதன் மூலம் கேள்வியை சீரானதாக பேணமுடியும். உயர்ந்த இலாபம் என்பதைவிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரான தளம்பல் அற்ற இலாபம் என்பதனையே ஆரம்ப நிலையில் சிறிய முதலீட்டாளர்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

**5. மீன்சார்ந்த கைத்தொழில்கள்**

யாழ் குடாநாடு கடலால் சூழப்பட்டுள்ளமையால் மீன் உற்பத்திக்கு மிக சாதகமான அம்சங் களை கொண்டுள்ளது. யாழ்ப்பாண கடல் வளத்தில் உள்ளார்ந்த மீன்வளத்தைவிட உண்மையான மீன் உற்பத்தி மிக குறைவு. 1987ம் ஆண்டு யாழ் மாவட்டமானது மீன் உற்பத்தியில் உயர் அளவை கொண்டிருந்தது. (48677 MT) அதன்பின் யுத்தம் தீவிரமடைந்த பின் உற்பத்தி மிகக் குறைந்த மட்டத்திலே காணப்பட்டது. போர் முடிவுக்கு வந்தபின்னரும் செழிப்பு நிலைமையை அடைய வில்லை.

அட்டவணை 2:

Fish production in Jaffna district

| Year | Fish production (MT) | Average monthly fish product (MT) |
|---|---|---|
| 1983 | 48687 | 4056.45 |
| 1984 | 23157 | 1929.75 |
| 1985 | 23775 | 1981.25 |
| 1988 | 24702 | 2058.5 |
| 1989 | 25078 | 2089.83 |
| 1991 | 1191 | 99.25 |
| 1996 | 1540 | 128.33 |
| 1999 | 3232 | 269.33 |
| 2000 | 20211 | 184.25 |
| 2005 | 15157 | 1263.08 |
| 2006 | 13431 | 1119.25 |
| 2007 | 2963 | 246.92 |
| 2008 | 1373 | 228.33 |

ஏனைய மாவட்டங்களைவிட மீன்வளத்தில் அதிக உள்ளார்ந்த ஆற்றலை யாழ்ப்பாணம் கொண்டிருக்கின்ற போதும் சாதாரண மக்களைப் பொறுத்து உயர்ந்த மீன் விலை காரணமாக பூரணமாக அவற்றை நுகரமுடியாதுள்ளது. எனவே மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உள்ளூர் மக்களின் குறித்தளவான கலோரிசக்திக்கு பங்களிப்பு செய்வதுடன் ஏற்றுமதியை அதிகரித்து சிறந்தவருமானத்தை பெற்றுக்கொள்ளமுடியும். அதேபோல் இவ் உற்பத்தியை கைத்தொழில் நிலைக்கு எடுத்துச்செல்ல வேண்டும். ஏற்கனவே கூறியதுபோல சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங் களின் வெற்றி என்பதில் அரசின் பங்களிப்பு அவசியமாகும். மீன் உற்பத்தியைப் புதுப்பிக்கும் திட்டங்கள் மீன்வளத்தினை அழியாது பாதுகாக்கும் திட்டங்கள் போன்றவற்றில் தனியார் ஈடுபடபோதில்லை. அரசு அல்லது மாகாண அரசு மாத்திரமே இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். இதன்மூலம் மீன் உற்பத்தி பெருக்கம் சாத்தியமாகும். உலர விடப் பட்ட மீன்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ரின் மீன் உற்பத்தி தொடர்பில் சிறந்த உள்ளார்ந்த வாய்ப்புக்கள் யாழ்ப்பாணத்தில் அதிகமாகும். மற்றைய தொழில்கள் போல் அல்லாது இதன்மூலம் சுற்றுப்புறச்சூழல் பாதிப்புக்கள் மிகக் குறைவாகும். ஆதனால் ஏற்படும் நன்மைகள் அதிகமாகும்.

வலைகள் (Fishing nets) சிறிய வகை யான மீன்பிடிப்படகுகள் (catamaran) போன்ற தொழிற்துறைகள் மீது முதலீடுகளை மேற் கொள்வதன் மூலம் இலாபத்தை உழைக்க முடியும்.

## 6. Livestock

பால் மற்றும் பால் உற்பத்திகள் மிக முக்கியமானவை. இன்று பெரும்பாலும் பைக் கற்றுகளில் அடைக்கப்பட்ட பால்மா வகைகள் மக்களுக்கு பிரதான ஊட்டம் தரக்கூடியதொன் றாக உள்ளது. ஆனால் யாழ் மாவட்டத்தில் மாடு கள் மற்றும் ஏனைய விலங்கினங்களை பண் ணைகளாக வளர்க்ககூடிய சாத்திப்பாடுகள் உள்ளன. அத்தோடு கிராமியக் குடும்பமும் இவ் வாறான விலங்குகளை வளர்ப்பில் ஆர்வமாக உள்ளன. பால் மற்றும் அது சார்ந்த பொருட்களு க்கு சந்தைப்படுத்தல் வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணப்பாடு கிராமிய மக்களிற்கு ஏற்படுகிற போது அவர்களது பால் உற்பத்திகள் மேலும் அதிகரிக்கும். பால் மா பைக்கற் நுகர்வினை முற்றாக கட்டுப்படுத்தி பதிலாக உடனடிப்பாலை (பைக்கற் பால்) உயர்தரத்தில் தயாரித்து விற்பனை செய்யும்முறை வளமைக்கு கொண்டு வருவது கடினமானதல்ல. ஆனால் ஆரம்ப நிலையில் ஏற்கனவே கூறியது போல மாகாண அரசு சரியான திட்ட வரைபுடன் செயற்பட வேண்டும்.

### 7. தும்பு மற்றும் நார் உற்பத்திகள்

(coir and fiber products)

யாழ் மாவட்டத்தில் தென்னை மற்றும் பனை வளம் அதிகமாக உள்ளது ஏற்கனவே இவற்றை பயன்படுத்தி உணவுப்பண்டங்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தென்மராட்சியில் சில தும்பு தொழிற்சாலைகள் இயங்கி வருகின் றன பெருமளவு பனை மற்றும் தென்னை வளங் கள் வீணடிக்கப்பட்டு வருகின்றன. எனவே தும்பு உற்பத்தியினை நவீன மயப்படுத்தி தொழிற் துறையாக விரிவாக்குவதன் மூலம் பிரதேசத் தினதும் ஏழைகளினதும் வாழ்வாதாரம் உயர்த் தப்படமுடியும்.

### 8. தனியார் வைத்தியசாலை

(Private hospital)

நவீன வசதிகளுடன் கூடிய வைத்திய சாலைக்கான கேள்வி யாழ் மாவட்டத்தில் காணப்படுகிறது. தரமான சேவை கொண்ட தனியார் வைத்தியசாலைக்கான கேள்வி உறுதி யானதாக இருக்கின்றது.

### 9. மகிழ்ச்சிதரும் பூங்காக்கள்

(Recreatinal Parrkm)

இரண்டு அல்லது மூன்று மகிழ்ச்சி அளிக்கக்கூடிய பூங்காக்கள் யாழ் மாவட்டத்தில் காணப்படுகின்ற போதும் அவை வசதிகள் அற்ற நிலையிலே இயங்கி வருகின்றன. இந்தியாவின் theme Park ற்கு இணையாக வடமாகாணத்தில் எதுவுமில்லை. ஆனால் இவ்வகைக்கான Theme பாக்கிற்கான கேள்வி யாழ் மாவட்டத்தில் அதிக மாக உள்ளது.

## 10. Child care centred

கூட்டுக்குடும்ப முறை உடைந்ததன் காரணமாகவும் கணவன் மற்றும் மனைவி இருவரும் வேலைக்கு செல்வதனாலும் நகரப் புறங்களில் மேற்கூறிய தொழிலுக்கு வரையறுக் கப்பட்ட கேள்வி காணப்படுகிறது.

### 11. எண்ணை சுத்திகரிப்பு

(Oil refining)

தேங்காயெண்ணை. நல்லெண்ணை மற்றும் ஏனைய விதைகளிலிருந்து எண்ணை வகைகளை சுத்திகரித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 12. உணவு தயாரிப்பு

(Food processing)

Cashew, கச்சான், mixer மற்றும் ஏனைய உணவுவகைகளை தயாரித்தல்

### 13. பயிற்சி நிறுவனங்களை உருவாக்குதல்

குறிப்பாக skilll அடிப்படையாக கொண்ட பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களை அமைத்தல். மேலும் ஆங்கில மொழித்திறனை வழங்கக்கூடிய நிறுவனங்களை அமைத்தல்.

### II. முடிவுரை

யாழ்ப்பாண மாவட்டமானது சிறிய நிலப்பரப்பினை கொண்டிருப்பதனாலும் அது இலகுவில் சூழல் மாசுபடும் தன்மையை கொண்டிருப்பதனாலும் பாரிய உற்பத்திக் கைத்தொழில்களை உருவாக்குவது யாழ்ப்பாண மாவட்டத்தின் பேண்தகு அபிவிருத்திக்கு உகந்தது அல்ல. ஆயினும் சூழல் மாசுவினை ஏற்படுத்தாத அல்லது மிகக் குறைந்த சூழல் மாசினை ஏற்படுத்தகூடிய சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை அதிகளவில் உருவாக்குவது சிறப்பானதாகும். குறிப்பாக யாழ்பாண குடா நாடானது விவசாய உற்பத்திக்கு சாதகமாக இருப்பதனால் அங்கு உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்களில் இருந்து விவசாயம் சார் கைத்தொழிலை உருவாக்குவது சிறப்பானதாகும். இவ்வகையில் பழச்சாறு, ஜாம், தகரத்தில் அடைக்கப்பட்ட பழ வகைகள், பால் பைக்கற், யோக்கற், ரின்மீன் உற்பத்திகள், ஐஸ் உற்பத்திகள், பனைமற்றும் தென்னையோடு சம்பந்தப்பட்ட கைத்தொழில்கள் போன்றவற்றை குறிப்பிடலாம். ஆனால் இங்கு முன்பு குறிப்பிட்டது போல அரசினுடைய அல்லது மாகாண சபையினுடைய ஆதரவும் ஊக்குவிப்பும் சிறப்பாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மேற்கூறிய தொழிற்துறைகள் மேலும் மேலும் விருத்திநிலைக்குள்ளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவம் பெறுகையில்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகையின் அருட்பார்வைக்கு உட்பட்ட கட்டப்பிராய் பிரதேசம்

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**
ஓய்வுநிலை விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை,
ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

சித்த புருஷர்களில் மூலவராகிய தவயோகி திருமூலநாயனார் ஈழமணித் திருநாட்டைச் சிவபூமி எனக் கூறியுள்ளார். சிவபூமியாகிய இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு ஞானபூமியாக மிளிர்கிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் சைவமும் தமிழும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கம் கிராமங் களில் இருபாலையும் ஒன்றாகும். இருபாலை தெற்கில் அன்னை பராசக்தியின் அருள் வீச்சுக்குப் பாத்திரமாகிய இடமாகக் கட்டப் பிராய் பிரதேசம் மிளிர்கிறது. "அம்பிகை யைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெற லாம்" என்ற மகாகவி பாரதியின் வாக்கிற்கு அமைய கட்டப்பிராய் முத்துமாரி அம்பா ளைச் சரணாகதியாகப் பற்றியே இப்பிரதேச மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். தாய் தனது பிள்ளைகளைக் காப்பாற்றுவது போல முத்தமாரி அன்னை தனது அடியவர்களைப் பாதுகாத்து அருள் புரிந்து வருகின்றாள். நமது நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக இப்பிரதேச மக்களில் பலர் இடம்பெய்ந்து புலம் பெயர் நாடுகளில் வாழ் கின்றார்கள். இவர்கள் உலகின் எந்தப் பகுதி யில் வாழ்ந்தாலும் தாம் பிறந்த மண்ணிலே மிகுந்த பற்றுள்ளவர்களாகவே இருக்கின் றார்கள். தாய் நாட்டையும், தாய்மொழியை யும், தமது சமயப் பண்பாட்டினையும் பேணி வளர்ப்பதிலே மிகுந்த அக்கறையுடன் செயற் படுகின்றார்கள்.

**இருபாலை சேனாதிராஜ முதலியார்**

சைவத்தையும் தமிழையும் வளர்ப்ப தற்காகத் தமது வாழ்நாளையே அர்ப் பணித்து வாழ்ந்த பலர் இருபாலைக் கிரா மத்திலே வாழந்தார்கள். சைவத்தின் காவல ராகவும், சைவ சோனதிபதியாகவும் வாழ்ந்த ஆறுமுகநாவலரின் முதல் குருவாக இருபா லையைச் சேர்ந்த சேனாதிராஜ முதலியார் அவர்களே திகழ்ந்தார். இவர் தந்தையார் நெல்லைநாத முதலியார் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள், மாதகல் சிற்றம்பலப் புலவர் தனது தந்தையார் ஆகியோரிடம் மாணவனாக இருந்து தனது கல்வி அறிவி னைப் பெற்றுக் கொண்டார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சரவணமுத்துப் புலவர், அம்பல வாண பண்டிதர் ஆகியோருக்கு ஆசிரியராக இருந்து ஞானதானத்தை வாரி வழங்கினார். சேனாதிராஜ முதலியாருக்குச் சைவ சித்தாந்த கருத்துக்களை புகட்டிய பெருமை கூழங்கைத் தம்பிரான் சுவாமிக ளையே சாரும். தஞ்சாவூரில் உள்ள சைவ ஆதீன மடத்தைச் சேர்ந்த கனகசபாபதி யோகிகள் (கூழங்கைத் தம்பிரான் சுவாமி கள்) இலங்கையில் சைவ சித்தாந்தக் கல்வி யைப் பரப்புவதில் பெரிதும் ஈடுபாடு கொண் டிருந்தார். வடமொழி, தென்மொழிகளில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவராகத் திகழ்ந்த இவரிடம் பலர் சைவசமயம் சார்ந்த தத்துவ நூல்களைக் கற்றுத் தெளிந்தார்கள். கொச் சிக் கணேசையர், வில்வராச முதலியார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபாலச் செட்டியார், வண்ணை வைத்தி லிங்கச் செட்டியார் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். வைத்திலிங்கச் செட்டியார் வண்ணார்பண்ணையிலே ஒரு பெரிய சிவன்கோயிலை நிறுவித் தர்மபரி பாலனம் செய்வதற்கும் கூழங்கைத் தம்பி ரான் சுவாமிகளே வழிகாட்டியாக இருந்தார். கூழங்கைத் தம்பிரானிடம் சைவ சித்தாந்த தத்துவத்தினைக் கற்ற இருபாலைச் சேனாதி ராஜ முதலியார் சைவசித்தாந்த தேனை அள்ளிப் பருகிச் சைவசித்தாந்த ஞானம் கைவரப் பெற்றவராக மிளிர்ந்தார். இவர் நல்லைக் கந்தன் மீது பாடிய திருவூஞ்சலில் இருந்து இவரிடமிருந்து சைவ சித்தாந்த ஞானத்தினை அறிந்து கொள்ள லாம். சிறந்த முருக பக்தராகிய சேனாதிராஜ முதலியார் அருளிய நூல்களில் நல்லை வெண்பா, நல்லையந்தாதி நல்லைக் குறவஞ்சி முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

**சேர் கந்தையா வைத்தியநாதன்**

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதராக இருந்த உயர்திரு D.S.சேனநாயக் காவின் நிரந்தரச் செயலாளர் என்ற உயர் பதவியை வகித்த பெருமை இருபாலை யைச் சேர்ந்த சேர் கந்தையா வைத்திய நாதன் அவர்களையே சாரும். இவர் தனது அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்பு ஒரு சிவத்தொண்டராகவே வாழ்ந்து வந்தார். ஈழத்தின் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றாகிய திருக்கேதீஸ்வரத் திருத்தலத் தின் திருப்பணிச் சபைத் தலைவராக பல வருட காலம் இருந்து ஆலய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார். பிற சமயத்தவர்க ளால் இருவடைய பணிகளுக்கு பல இடை யூறுகள் ஏற்பட்ட பொழுதும் சவிக்காது, மனம் தளராது தான் நினைத்த திருப்பணிகளை எல்லாம் செவ்வனே செய்து முடித்தார். கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரப் பெரு மானின் திருவருள் துணை அவருக்குப் பூரணமாகக் கிடைத்தது. உயர் பதவிகளில் இருந்தமையால் பெற்ற அனுபவ அறிவும் இவருடைய பணிகளுக்குத் துணையாக அமைந்தன. திருக்கேதீஸ்வரத்தை தெய்வீ கச் சூழலாக மாற்றியமைத்த பெருமை, சேர் கந்தையா வைத்திய நாதனுக்கே உண்டு. வைகாசி விசாகத்தினை தீர்த்தமாகக் கொண்டு திருக்கேதீஸ்வரத்திலே நடைபெ றும் திருவிழாவில் உபயங்கள் பலவற்றினை யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருக்கும் சிறப்பு மிக்க சைவப் பாடசாலைகளுக்கு வழங்கியி ருந்தார். கல்வி கற்கும் காலத்தில் மாணவர்க ளைத் திருக்கேதீஸ்வரத்துடன் இணைக்கும் ஒரு தீர்க்க தரிசனம் மிக்க முயற்சியினைச் செய்திருந்தார். மாணவர்கள் பெரியவர்க ளாகிய பின்பும் திருக்கேதீஸ்வரத்தின் மீது ஈடுபாடு கொள்வதற்கு இந்நிகழ்வு திசை காட்டியாக அமைந்திருந்தது. பிராமணச் சிறுவர்களின் கல்வியை மேம்படுத்துவதற் காக ஆலயச் சூழலில் குருகுலம் ஒன்றினை அமைத்தார். வேதாகமக் கல்வியைச் சிறப்பா கப் பெற்ற சிவாச்சாரியார் பலர் இந்தக் குரு குலத்தில் இருந்து உருவாகினார்கள். 1948 ஆம் ஆண்டு பிரதம மந்திரியின் நிரந்தரச் செயலாளராக அலரி மாளிகையில் வேலை விட்டு வீடு திரும்பும் பொழுது இராஜகம்பீரத் துடன் குதிரையில் பவனி வந்த காட்சியி னைக் கண்டேன். 1960 ஆம் ஆண்டளவில் திருக்கேதீஸ்வரத்தில் நான்கு முழ வேட்டியு டன் நின்று திருத் தொண்டு செய்யும் காட்சி யினையும் கண்டேன். இந்தக் காட்சி மணி வாசகப் பெருமானை தனக்கு ஞாபகப்படு த்தியது என்ற யாழ் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபராக இருந்த திரு.இ.சபாலிங் கம் அவர்கள் என்னிடம் கூறிய பொழுது "தவமும் தவமுடையார்க்கு ஆகும் என்ற வள்ளுவரின் வாக்கே எனக்கு ஞாபகத்திற்கு வந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சக்தி தாசராகிய கணபதிப்பிள்ளை ஆசிரியர்**

சிறிய கிராமமாகிய கட்டப்பிராயி லும் அதன் சூழலிலும் அருள் வீசும் சைவ ஆலயங்கள் பல காணப்படுகின்றன. வேற்று மதக் கலப்பின்றி சைவத்தமிழர்கள் மட்டும் வாழும் பிரதேசமாகவே கட்டப்பிராய் மிளிர் கின்றது. அம்பிகையின் அருட்பார் வைக்கு உட்பட்ட பிரதேசமாக மிளிரும் கட்டப்பிரா யின் மையத்தில் முத்துமாரி அம்பாள் ஆல யம் அமைந்துள்ளது. வேளாதோப்பு அம்மன் ஆலயம், மீனாட்சி அம்பாள் ஆலயம் ஆகிய அம்பாள் ஆலயங்களும், வயல்வெளிக் கந்த சுவாமி ஆலயமாகிய முருகன் ஆலயமும், சிறிய வைரவர் ஆலயங்கள் சிலவும் இங்கே காணப்படுகின்றன. இராஜகோபுரம், சித்திரத் தேர், கல்யாண மண்டபம் என்பவற்றுடன் மிளிரும் சிறப்பு மிக்க ஆலயமாக முத்துமாரி அம்பாள் ஆலயம் திகழ்கிறது.

முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலனசபையின் தலைவராக நாற்பது வருடங்களுக்கு மேலாக இருந்து பணி யாற்றிய பெருமை அமரர் கணபதிப்பிள்ளை ஆசிரியரையே சாரும். இவரடைய காலத் தில் ஆலயம் புதுப்பொலிவு பெற்று மகோற்ச வம் நடைபெறும் ஆலயமாக வளர்ச்சி அடைந்தது. இப்பிரதேசத்தில் உள்ள 90%ஆன கிணறுகளில் இருந்து கிடைக்கும் நீர் உவர் நீராகவே காணப்படுகிறது. கணபதிப்பிள்ளை ஆசிரியர் ஆலய பரிபாலனசபையின் தலை வர் பதவியை ஏற்றதும் ஆலயத்தின் முன்பாக கிணறு ஒன்றினை வெட்டுவித்தார். இந்தக் கிணற்றிலிருந்து ஊற்றெடுக்கும் நீர் உவர்த் தன்மை இல்லாத சுத்தமான நீராக இருந்தது. அம்பிகையின் திருவருள் ஆகும். இப்பிர தேசத்தில் உள்ள 400 குடும்பங்கள் வரை தினமும் இக் கிணற்றிலிருந்து குடிப்ப தற்கான சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்கி றார்கள்.

கர்மயோகியாகத் திகழ்ந்த கண பதிப்பிள்ளை ஆசிரியர் அம்பாளின் ஆலய வளர்ச்சிக்காகச் செய்த பணியினைப் பாரா ட்டி கட்டப்பிராய் மக்கள் "சக்திதாசர்" என்ற பட்டத்தினை வழங்கி அவரைக் கௌரவித் தார்கள். தொடர்ந்து பல அன்பர்களின் கூட்டு முயற்சியினால் ஆலயம் செவ்வனே பரிபால னம் செய்யப்பட்டு வருகிறது. புலம்பெயர் நாடுகளில் வாழும் கட்டப்பிராய் மக்களின் பேருதவியும் ஆலயத்தின் வளர்ச்சிக்கு துணையாக அமைந்துள்ளது.

அம்பாள் ஆலயத்தின் தற்போதைய தலைவராக இளைப்பாறிய கிராம சேவை யாளர் திரு.சின்னத்துரை இலட்சுமிகாந்தன் அவர்கள் பணியாற்றுகின்றார். திருநெல் வேலி கிழக்கை பிறந்த இடமாகக் கொண்ட இவர் கட்டப்பிராயைச் சேர்ந்த ஐயாத்துரை யின் புத்திரி தங்கமணி அவர்களைத் திரு மணம் செய்து கொண்டார். திருநெல்வேலி யின் மைந்தன் கட்டப்பிராயின் மருமகன் ஆனார். மருமகன் என்றால் மருகி வந்த மகன் என்பதே பொருளாகும். கட்டப்பிரா யின் மருமகனாக இருந்த இவர் தற்பொழுது மைந்தனாகவும் மாறிவிட்டார். இங்கு உள்ள பல சமுதாய நிறுவனங்களின் தளபதியாக இருந்து வழி நடாத்துகின்றார். சமயப் பற்று, மொழிப்பற்று, சமுதாயப் பற்று எல்லாம் கொண்ட இவர் தமிழ்த் தேசியத்தின் மீதும் மிகுந்த பற்றுக் கொண்டுள்ளார். எழுப தாவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் இவர் உடல் ஆரோக்கியமும் உள ஆரோக்கி யமும் பெற்று அமைதியான வாழ்வு வாழ அகிலாண்டேஸ்வரியாகிய அன்னை முத்து மாரி அம்பாளின் திருவருள் துணை பூரண மாகக் கிடைக்க வேண்டுமென்று இதய பூர்வமாகப் பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டில் வாழ்க்கை வட்டச் சடங்குகள்

*சின்னதம்பி பத்மராஜா*
M.Ed, M.Phil
பிரதி அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம் தமிழர் தம் பண்பாட்டின் குறியீடாக நோக்கப்படும் சிறப்பிற்குரியது இப் பிரதேசப் பண்பாட்டில் வாழ்க்கை வட்டச் சடங்குகளுக்கு முக்கிய இடம் உண்டு. இச்சடங்குகள் ஒரு மனிதனுடைய சதுரம்பம் அதாவது வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை நம்பிக்கையின் அடிப்படையில் பயின்று வருகின்றமை கண்கூடு. இவை மனித வாழ்வியலோடு ஒன்றித்துவிட்டனவாய் அமைவதுடன் தமிழர் தம் பண்பாட்டின் அனைத்துக் கூறுகள் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன.

வாழ்க்கை வட்டச் சடங்குகள் பயில் நிலைக்கான பின்புலம் குறித்த தெளிவு என்பது மக்களிடம் மிகவும் குறைவாகவே உள்ளது நம்பிக்கையின் அடிப்படையாக மேற்கொள்ளப் பட்டு வரப்படுவதாக உள்ள இச் சடங்குகள் தொடர்பான முழுமையான அறிவைப் பெறவும் சமூகவியல் பின்புலத்தில் இதன் நிலை பற்றி அறியவும் வருங்காலச் சமூகத்திற்கு இவ் வாழ்க்கை வட்டச் சடங்குகள் குறித்த முழுமையான விளக்கத்தைக் கையளிக்கவும் வேண்டிய பொறுப்பு எல்லோருக்குமே உரியது.

தமிழ்ச் சமூகத்தால் பின்பற்றப்பட்ட பண்பாடும் வாழ்க்கை வட்டச் சடங்குகளும் இன்று முழுமையாக பின்பற்றப்படுவதில்லை. இன்றைய வாழ்வு இயந்திர மயமான வாழ்வாகி விட்டது. மனிதன் ஓடிஓடி உழைப்பதும் தான் தன் என்ற குறுகிய மனப்பாங்கினூடு செயற்படுவதும் பல சோலிகள் மத்தியில் இவற்றை சம்பிரதாயமாக செய்ய வேண்டி முனைவதும் இதற்குக் காரணங்களெனலாம் இதன் காரணமாக அவை இன்று அருகி வருவதையும் காணமுடிகின்றது.

தமிழர் சமூகமானது கடந்த மூன்ற தசாப்த கால யுத்த அனர்த்தங்களாலும், அதன் பிரதிபலிப்பான பொருளாதார நெருக்கடிகளாலும் இடம்பெயரவும் புலம்பெயரவும் தொடங்கியமையும் இவ்வாழ்க்கை வட்டச் சடங்குகளை முழுமையாக அனுசரிக்க முடியாது போனமைக்கு மற்றொரு காரணமாகும். முற்காலத்தில் தமிழ்ச் சமூக அமைப்பானது ஓர் கூட்டுக்குடும்ப அமைப்பு முறையாகவே இருந்து வந்தது இதன் போது தாய் தந்தை பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள், பூட்டர்கள் என ஒரு குடும்ப உறவுப் பாலம் கட்டப்பட்டிருந்தது. இன்று அது அறுந்து துண்டு துண்டாகி சிதறிவிட்டமையும் இவ் வாழ்க்கை வட்டச் சடங்குகள் முழுமையாக பின் பற்றப்படாமைக்கு மற்றொர காரணமெனலாம்.

புலம்பெயர் தமிழர்கள் தத்தமது நாட்டின் பண்பாடு, கலாசாரம், இருப்பிடவசதி முதலியவற்றினால் முழுமையாக இச்சடங்குகளைப்பின்பற்ற முடியாது போயுள்ளது இன்று பரபரப்பான வாழ்க்கை முறைக்குள் தன்னைப் புகுத்திக் கொள்ளும் ஓர் சமூக அமைப்பும் போலியான பிறநாட்டுக் கலாசார மோகங்களால் ஆழப்படுகின்ற ஒரு சமுதாய அமப்பும், மேலைத்தேய நாகரிகங்களைப் பின்பற்றவதே நவநாகரிகம் என கருதி வாழும் ஒரு சமூகப் பிரிவும் தோன்றியமையும் நீண்டகாலமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றி வந்த இவ்வாழ்க்கை வட்டச் சடங்குகள் முழுமையாகப் பின்பற்றப்படாமல் போனமைக்கு மற்றொரு காரணம் எனலாம்.

இன்று எமது சமுதாய அமைப்பிலே இளைஞர்கள் மத்தியில் பன்நாட்டுப் பண்பாட்டு ஊடாட்டம் வெகுவாக பரவியமையும் முழுமை யாக எமது இல்வாழ்க்கை வட்டச் சடங்குகள் கடைப்பிடிக்க முடியாத போனமைக்குரிய காரணங்களில் ஒன்று எனலாம். இச்சடங்கு களை முழுமையாக கடைப்பிடிப்பதற்கு சமூக, பொருளாதார அரசியற் சூழ்நிலைகளும் சாதகமான சூழலை ஏற்படுத்தியிருக்கவில்லை என்பதும் மறுப்பதற்கில்லை. யாழ்ப்பாணத்திலே நடக்கின்ற பெரும்பாலான வீடுகளிலே புலம் பெயர் நாடுகளில் வாழும் உறவுகளின் பொரு ளாதாரப் பங்களிப்புடனேயே வாழ்க்கை வட்டச் சடங்குகள் மேற்கொள்ளப்படுவதும் இதன் காரணமாக பொருளாதாரத்தை வழங்குவோரது விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப இவ் வாழ்க்கை வட்டச் சடங்குகளை செய்ய வேண்டிய நிலையி ருப்பதும் முழுமையாக இச்சடங்குகளை நிறை வேற்ற முடியாமைக்கரிய மற்றொரு பிரதான காரணம் எனலாம்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையும் உலகமயமாதல் செயற்பாடுகளும் நவீன அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்க ளும் இவ்வாழ்க்கை வட்டச் சடங்குகளை முழு மையாக கடைப்பிடிக்க விரும்பாமை போன்ற மனமாற்றங்களும் இச்சடங்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தின எனலாம். இன்று முதியோர், மூத்தோர் தொகை குறைந்து வருவதும், அவர் களை இல்லங்களில் வைத்து பேணாமையும் காரணமாகவும் அவர்களிடமிருந்து இச்சடங்கு கள் அவற்றுக்கான காரணங்கள் பற்றி அறிந்து கொள்ளாமையும் எமது சமுதாயத்தில் காணப் படும் பாரிய குறையாகும். இதன் காரணமாக வாழ்க்கை வட்டச் சடங்குகள் தொடர்பாக அறிவும் அனுபவமும் மிக்கவர்கள் குறைவாகக் காணப்படுவதும் இளம் தலைமுறை இவை பற்றிய பூரண அறிவைப் பெறாது இருக்கின்ற நிலையும் எமது சமுதாயத்திலே புரையோடிப் போயுள்ளமையும் வேதனைக்குரியதே.

எனவே தான் தமிழர் பண்பாட்டில் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசததிலே காலம் காலமாக பின் பற்றப்பட்டு வந்த வாழ்க்கை வட்டச் சடங்குகளாகிய பிறப்புச் சடங்கு

பூப்பச் சடங்கு

திருமணச் சடங்கு

இறப்புச் சடங்கு பற்றியும் இவையோடு தொடர்புபடச் செய்யப்படுகின்ற சடங்குகள் பற்றியும் விரிவாக ஆராய வேண்டிய நிலை சமூக பண்பாட்டு அசைவியக்கத்திற்கு வேண்டிய தாக உள்ளது எனவே பண்பாட்டின் ஓர் கூறாக வழங்கிவரும் வாழ்க்கை வட்டச் சடங்கினை முழுமையாக ஆவணப்படுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது. இவை தொடர்பான நம் பிக்கைகளும் நடைமுறைகளும் பற்றியறிவை எதிர்காலச் சந்ததியினர் தெரிந்து கொள்வதற் கும் வழிசமைக்கப்பட வேண்டி உள்ளது மேலைத்தேய நாகரிக மோகமும் பல்லின கலாசாரமும் முழுமையாக நமது தமிழர் பண்பாட்டின் வாழ்க்கை வட்டச் சடங்குகளைப் பெரிதும் பாதிக்காத வகையில் தேவையான நடைவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலை உள்ளது. எதிர்கால சந்ததி இவை பற்றிய அறிவைப் பெறவும் சடங்குகளுக்கான காரண காரிய தொடர்பின் தெரிவ்னமையை நீக்கவும் காலவோட்டத்தில் இவை கரைந்து போகாது காக்கவும் இது பற்றிய முழுமையான ஆய்வு ஒன்று வெளிவராமையும் பாரிய குறையாக உள்ளது. எமது பிரதேசம் சார்ந்த உயர்கல்வி நிறுவனங்கள், சமூக, பண்பாட்டு நிநிறுவனங் கள், பண்பாட்டு உணர்வாளர்கள் இது பற்றிச் சிந்திக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

தமிழர்தம் பண்பாட்டின் பிரிக்க முடி யாத ஒரு கூறாக இவ்வாழ்க்கை வட்டச் சடங்கு கள் விளங்குவதனால் பிறப்புச் சடங்கு என்ற வகையில் ஒரு தாயானவள் கருவுற்ற நாள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் குழந்தையின் பிறப்பு வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்படும் சடங்கள் குறித் தும் பூப்புச் சடங்கு என்ற வகையில் பெண்களு க்கே உரிய ஒரு தனித்துவமான இச் சடங்கின் நடைமுறை நம்பிக்கைகள் குறித்தும், திருமணச் சடங்கு என்ற வகையில் திருமணத்திற்கு முன் னைய சடங்கு முதல் திருமணத்திற்கு பின்ன ரான சடங்குகள் வரையும் இறப்புச் சடங்கு என்ற வகையில் இறப்பு முதல் அதன் பின்னரான சடங்குகள் வரை ஆராய வேண்டிய அவசிய மாகும். இவை பிரதேசங்களுக்கு பிர தேசமும் சமூக அமைப்புக்களுக்கு சமூக அமைப்பும், வேறுபட்டு அமையுமெனினும் இவற்றை ஆவணப்படுத்த வேண்டியது கடமையாகும்.

காலவோட்டத்திலே இழந்தவை போக எஞ்சியிருப்பவற்றையாவத எமது சமுதாயம் பேணவேண்டும். வருங்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டியது பொன்னும் பொருளும் மட்டுமல்ல இவையும் தான் எனவே மானிடவி யல் பண்புகள், நம்பிக்கைள், சடங்குகள் குறித் தும் அவர்களுக்கு வழங்க சமூகம் தயாராக வேண்டும் இவை அற்றுக் போவதானாலேயே சிறுவர் இல்லங்களும் முதியோர் இல்லங்களும் முளைத்தெழுகின்றன எனவே மனிதன் மனிதம் மிக்கவனாக வாழ இவை அவசியம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகனும் மக்கள் மருமக்களும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுரையாசிரியர்கள்

## பேராசிரியர் கு.மிகுந்தன்

விவசாய உயிரியல் பேராசிரியர்
பீடாதிபதி உயர் பட்டப்படிப்புகள் பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்.

## கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்

சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்புப் பல்கலைக்கழகம்
உறுப்பினர் வடக்கு மாகாண சபை.

## கலாநிதி சின்னத்துரை விஜயகுமார்

முதுநிலை விரிவுரையாளர்
பொருளியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

## சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்

ஓய்வுநிலை விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை
ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

## சின்னத்தம்பி பத்மராஜா M.Ed, M.Phil

பிரதி அதிபர்,
இலங்கை அதிபர் சேவை தரம் – 2
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MATHI COLOURS
Nallur 021 2229285